# ஞானசம்பந்தம்

மலர் 11]   நந்தன ௵ வைகாசி ௴ 10—6—52.   [இதழ் 7

தருமபுரம் ஆதீனம்

ஸ்ரீ தர்மபுரீசுவரர் ஆலயத்தில்

மகாசந்நிதானமும்

ஆசாரிய சுவாமிகளும்



அதிபர்: நாகலிங்கத் தம்பிரான்.

13—6—52 வெள்ளிக்கிழமை

தருமபுர ஆதீன ஸ்தாபகர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## குருபூஜை விழா

காலை 11-மணிமுதல்:

**ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் பூஜை**

நினைவு வெளியீடு:

**இராமேசுவர யாத்திரை**

---

14—6—52 சனிக்கிழமை

காலை 11-மணிமுதல்:


**ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் பூஜை**

நடுப்பகல் 1-மணிக்கு:

**மாகேசுவர பூஜை**

இரவு:

**பட்டினப்பிரவேசம்**



தருமபுர ஆதீனத்தில் திருநெறிய தெய்வத்தமிழ்
மாநாட்டுத் தொடக்கவிழா.

**ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள்
தொடங்கிவைக்கின்ருர்கள்.**



தருமபுர ஆதீனம்
ஸ்ரீ தர்மபுரீசுவர சுவாமி கோயில்
முகப்பில்
மகாசந்நிதானமும் - ஆச்சாரியசுவாமிகளும்.

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 11] நந்தன௵ வைகாசி௴ 10—6—52. [இதழ் 7

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## நல்ல திட்டம்

கௌரவமான செல்வக்குடும்பத்தில் வந்தவரும், பரம பக்தரும் ஆகிய தர்ம ஸ்தாபன மந்திரி கனம் வேங்கடசாமி நாயுடு அவர்கள், சமீபத்தில் ஒரு உருப்படியான திட்டத்தை அளித்திருக்கிறார்கள். அது ஒரு நல்ல திட்டமானதால் அதை முழுமனதுடன் வரவேற்கிறோம். கோயில்கள் மோக்ஷ சாதன மட்டும் அல்ல; தென்னாட்டுக் கலாசாரங்களின் கற்பனைக் கூடம்; பழைய சாஸ்திர சம்பிரதாயங்களைக் கண்டு கற்றுக் கொள்ளக்கூடிய புரட்டாத ஏடுகள்; வரலாறுகளுக்கெல்லாம் ஒரு கருவூலம்; இத்தகைய கோயில்களிலிருந்து ஒரு கல் தன் நிலையிலிருந்து நழுவுமானாலும் அது மக்களுடைய கவனக் குறைவால் நிகழ்வதென்றே சொல்லவேண்டும். தங்கள் தங்கள் வீடுகளைக்காட்டிலும் எல்லா மக்களுடைய உயிர் நிலையங்களாகவும் கோயிலைக் கருதவேண்டும். அதிலும் மங்களாசாசனம் பெற்ற கோயில்களாகவும், பாடல்பெற்ற கோயில்களாகவும் இருக்குமானால் அவற்றில் மேற்பூச்சு உதிரவிடுவதுங்கூட விரும்பத்தகாத ஒன்று.

சென்ற மார்கழி மாதத்தில் எங்கள் மகாசந்நிதானம் அவர்கள் சிவஸ்தல யாத்திரைசென்று வந்தபோது திருந்து தேவன்குடி கலிக்காமூர் ஆகிய தலங்களை வழிபடச்சென்றார் கள். அக்கோயில்கள் இருந்த நிலையை அந்தமாத இதழில்

விளக்கமாக எழுதியுள்ளோம், இப்படிப்பட்ட ஏழைக் கோயில்களைத் திருத்துவதற்குரிய திட்டங்களும் அதில் குறிக்கப்பெற்றுள்ளன. அத்தகைய எண்ணங்களுக்கெல்லாம் ஆதரவு தருவதாக மதஸ்தாபன மந்திரியின் பேச்சு அமைந்திருப்பதை மிகமிகப் பாராட்டுகிறோம். அவர்கள் கோயில்களின் உபரிவருமானத்திலிருந்து சிறு பங்குகளைச் சேர்த்துப் பெரும் பொருள் திரட்டி, கோயில்களையெல்லாம் திருப்பணி செய்விக்கலாம் என்று யோசனை கூறியிருக்கிறார்கள். அது மிகவும் உயர்ந்த திட்டந்தான். சற்றேறக்குறைய சுமார் நாற்பது லக்ஷத்துக்கு மேற்பட்ட தொகை, தர்மஸ்தாபன போர்டு கலைக்கப்பட்டு அரசாங்கம் மேற்கொண்ட காலத்து எடுத்துக் கொள்ளப்பட்டது; அந்த நாற்பது லக்ஷத்தையும் மூலதனமாக முதலீடுசெய்து அதன் வட்டி வருமானத்திலிருந்தே ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோயில்களாகத் திருப்பணி செய்து வரலாம் என்று நாங்கள் அப்போதே தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்.

கோயில்களுக்குப் புது வரிபோல புதுக் கட்டணங்களை விதித்துப் பழைய கோயில்களைத் திருப்பணி செய்வதைக் காட்டிலும், அந்தப் பெரும் முதலின் வட்டி வருமானத்தைக் கொண்டு திட்டம் வகுப்பது மிகச் சிறந்தமுறையாம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆஸ்திக சிகாமணிகள் அனைவரும் இந்தக் கருத்தை அரசாங்கத்திற்கு அறிவித்துக் கொள்ளும்படியும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

## சமயக்கல்லூரி தேவை.

சமயம் என்பது சடங்குகளை அடிப்படையாகக் கொண்டு தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கிக்கொண்டிருக்கும் மன அமைதிக்கேற்ற நிலை, அதனை வளர்த்துக் காப்பாற்ற, திருக்கோயில்களும் மதஸ்தாபனங்களும் உதவி செய்து வந்தன-வருகின்றன, இப்பொழுது தத்துவ உணர்ச்சியற்று வெறும் சடங்குமாத்திரத்தில் மக்கள் நின்றுவிடுவதால் அவர்களுக்கு உறுதியான அன்பு உண்டாவதில்லை. நிலைத்த அன்பு

உண்டாவதில்லை. நிலைத்த அன்பு உண்டாகவேண்டுமானால் தத்துவசாஸ்திரப் பயிற்சி மிக இன்றியமையாதது. அதற்காகத் தத்துவ சாஸ்திர கலாசாலைகள் ஏற்பட வேண்டும். எல்லா மதத் தத்துவங்களைப்பற்றிய உண்மைகளும் போதிக்கப்பட வேண்டும். அதில் தேர்ந்தவர்களுடைய கையிலே தேவாலயங்களை ஒப்புவிக்கவேண்டும். மருத்துவக் கல்லூரியில் பயிலாதவருக்கு மருத்துவ விடுதியில் வேலைபார்க்கும் தகுதி இல்லாதவாறு போல, தத்துவ சாஸ்திரப் பயிற்சியில்லாதவர்கட்கு தேவாலயங்களில் வேலையில்லை என்பது உறுதியாக்கப்படவேண்டும். இத்தகைய கல்லூரிகளுக்குச் சிற்பக் கலை, வார்ப்புக்கலை, கோயில் நிர்மாணக்கலை, ஓவியக்கலை முதலியனவும் அவற்றைப்பற்றிய அறிவு நூல்களும் உபபாடங்களாகக் கட்டாயம் ஏற்படுத்தப்பட வேண்டும். இப்படிப்பட்ட ஒரு கலாசாலை இன்றியமையாமையை உணர்ந்து நமது மதிப்பிற்குரிய குன்னன் ராஜா அவர்கள் ஒரு சமயக்கல்லூரி அமைக்கப்பட வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள்.

ஏதோ எங்கள் ஆதீனத்துப் பொருள் நிலைக்கு ஏற்றவாறு அர்ச்சகர்களுக்குப் பயிற்சி வகுப்பு ஒன்றை ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்படுத்தி, பதினோராண்டுகளாக நடத்தி வருகிறோம். நீண்டகாலமாக நடந்துவரும் இத்தகைய ஸ்தாபனங்கட்கு, சகல தேவாலயங்களிலிருந்தும் உபகாரச் சம்பளம் கொடுத்து, அருச்சக மாணவர்களை அனுப்பி, ஐந்து ஆண்டும் பயிற்சி பெறுமாறு கட்டாயப் படுத்துதல் மிகமிக இன்றியமையாதது. அர்ச்சக முறைக்கு வெறும் படிப்பு மட்டும் போதாது! கைப்பழக்கமும் வேண்டும் ஆதலால் நெடு நாளாக நடந்துவரும் ஸ்தாபனங்கட்கு மாணாக்கர்களை அனுப்பும்படி எல்லாத் தேவஸ்தான நிர்வாகிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்புதல் இன்றியமையாதது.

திருப்பதியில் மட்டும் ஒரு கல்லூரி ஏற்பட்டால் போதாது; இரண்டு மூன்று கல்லூரிகளாவது தேவை. ஆதலின் அவற்றை அரசாங்கம் அமைத்துதவுமானால் தத்துவசாஸ்திர அறிவு மக்களிடையே பரவும் என்பதற்கு ஐயம் இல்லை.

328.

# தொனிப்பகுதி.

வித்வான், திரு. K. S. விஸ்வநாத சாஸ்திரிகள் P. O. L.
S. V. O. கல்லூரி, திருப்பதி.

(தொடர்ச்சி)

தடவுகை மணிவெயிலும் பிறையுமிழு நிலவுமெதிர் சடிலநாதன்
அடவுகை நெடுசிலையா னசுரர்புர மெரித்தபிரா னருணைநாட்டில்
திடவுகை மனையவரே! தனஞ்சிறிதுங் காணாத சிறியார் தம்மைக்
கடவுகை நீர்வினவிப்பிணைதேடி முறிதனையேன் கைக்கொண்டீரே.

(தனஞ் சிறிதுங் காணாத சிறியார் தம்மை—நகில்கள் சிறிதும் தோன்றப் பெறாத இளமைப் பருவத்தாளை, பொருள் இல்லாத அற்பரை. கடவுகை—கூடும் முறையில், வட்டிக்கு வாங்குங் கடவுகை. பிணைதேடி—மான்வந்ததோ என்று வினவி அதனைத் தேடிக்கொண்டு, கூட்டுக் கையொப்பம் இடுவாரைத் தேடிக் கொண்டு. முறிதனை—தழையை, கடன் வாங்குவோர் எழுதிக் கொடுக்கும் முறிச்சீட்டை)

தலைவியின் இளமைத் தன்மையைப் பாங்கி தலைவற்கு உணர்த்துகின்ற அகப்பொருட்டுறைக்கு உரியது இச்செய்யுள். இதனுள்ளும் 'நகில்கள் தோன்றப்பெறாத அத்துணை இளமைப் பருவத்தாளைத் தலைவியாகப் பெறுகின்ற முறையில் மான் வந்ததோ என்பதுபோலச் சிலவினவி அம்மானைத் தேடிவருவார் போல் வந்து தழையையும் ஏன் கைக்கொண்டீர்' என்றும், 'பொருளில்லாத அற்பரிடத்திற் கடவுகைப் பொருள் கேட்டுக் கூட்டுக் கையொப்பம் இடுவாரையுந் தேடிக்கொண்டு முறிச் சீட்டையும் ஏன் கைக்கொண்டீர்' என்றும் செம்பொருளாக இரண்டுபொருள் அமைந்துள்ளன. இவ்விடத்திலும் இரண்டாவது பொருள் தொடர்புடையதாகிக் குற்றமற்றதாகவேண்டுமானால் உவமை இன்றியமையாதது. பொருளற்ற அற்பரிடத்திற் கடன் கேட்டுப் பெற விரும்பிப் பிணைதேடி முறிச் சீட்டும் ஏந்தி நிற்பது எவ்வாறு பயனற்றதாமோ அவ்வாறே இவ்விளமை யுடையாளைத் தலைவியாகப் பெறவிரும்பி மான் தேடுவார் போற் சிலவினவி அதனைத் தேடிவந்து தழையையும்

ஏந்தி நிற்பது பயனற்றதாம்' என்று கொண்ட பின்னரே இது பொருத்தமுடையதும் நயமுடையதும் ஆகின்றது. ஆதலின் இவ்விடத்தும் உவமையணி சொல்லாற்றலாற் றோன்றிய தொனியா யமைகின்றது.

'கன்னி யத்தம்வந் தினமணிக் கற்கடகத்தின்
மன்னி யுற்ற தற்புதம்'

'மாயை யாகிய கன்னியின்கை மணிக்கற் கடகம்' அணியப் பெற்றது வியப்பு' என்றும் 'கன்னியாராசிக்கு உரிய அத்தநாள் கற்கடக ராசியிற் பொருந்தி நின்றது வியப்பு' என்றும் தனித் தனியேகாணப்படும் இரண்டுதொடர்ப்பொருள்களும் இவ்வாறே உவமையும் பொருளுமாக அமைந்து தொடர்புற்று நயமுடைய வாகின்றன. கன்னிக்குரிய அத்த நாள் கடகத்திற் பொருந்தி நிற்பதும் வியப்பே. இதைப் போலவே மாயையின்கை மணிக் கடகம் அணியப் பெற்றதும் வியப்பே. யாரே அழகுக்கு அழகு செய்வார்! இவ்விதம் கொண்டாலன்றி இது பிறவாற்ருல் அமைவதில்லை. ஆகவே இஃதும் இத்தொனிவகைக்கு உரியதா கின்றது.

இவ்வாறே இத்தொனிவகைக் குரிய இலக்கியங்கள் இயம்ப வேண்டும் பொருளோடு மற்றுமோர் பொருளையும் செம்பொரு ளாகவே உணர்த்த அஃதும் தொடர்பிலது குற்றமுடைய தென்று நீக்கப்பெருமற் குறிப்புப் பொருளாக உவமை ஒன்று தோன்றித் தொடர்புடையதாகவும் நயமுடையதாகவுஞ் செய்தலின் குறிப்பாற் றோன்றிய இவ் வுவமையணி சொல் லாற்றலாற் றோன்றுந் தொனியாயிற்று. சிலேடையில் இவ் வியல்பிலது. அது இரண்டு சொற்ருெடர்ப் பொருளை உணர்த் துவதோடு அமைந்து விடுகின்றது. இத்தொனிவகையோ இதன்மேலும் அணி யொன்றைக் குறிப்பாற்றலாற் றோற்றுவிக் கின்றது, ஆதலின் இத்தொனிவகையின் இயல்புவேறு; சிலேடை யின் இயல்பு வேறு.

இதுவரையிற் காட்டிய இலக்கியங்களுள் உவமையணி தொனியாயமைவதைக் கண்டோம். இதுபோலவே பிற அணி களுங்கூட இத் தொனி வகையில் தோன்றலாம்.

ஆலங் குடிப்பவ னாலங் குடியான்
நாளும் பணிந்திட நலமே தருவான்.

இதனுள் விரோத அணியோ அல்லது அதற்குத் துணை செய்கின்ற சிலேடை அணியோ இரண்டுங் கூற இயல்வதில்லை. விரோதவணி என்று அறிவிப்பதற்குரிய உறுப்பு ஒன்றும் பெற்றிலது. இது விரோதவணி என்று அறிந்த பின்னரே சிலேடையும் அதற்குத் துணைசெய்வதாகத் தோன்றும்.

'விச்சா தரனேனு மந்தரத்து மேவானல்
அச்சுத னேனுமம் மாயனலன்'

என்பதனுள் 'எனினும்' என்பது 'ஏனும்' என்று நின்று விரோதத்தை வெளிப்படுத்திவிடுகின்றது. சிலேடையும் இதற்குத் துணைசெய்வதாக அமைகின்றது. இவ்வாறன்றி,

—'நிச்ச
நிறைவான் கலையா னகளங்க நீதி
இறைய னநகனெங் கோ'

என்பது போல் வருவதே இத்தொனிவகைக்கு உரியதாகும். இவ்வாறே ஆலங்குடிப்பவன்' என்பதனுள்ளும் விரோதவணி காணப்படுகின்றது. ஆனால் அதனை வெளிப்படையாகக் கூறக் கூடிய உறுப்பொன்றும் காணப்படவில்லை. இவ்விரோதவணி சொல்லாற்றலாற் றோன்றுங் குறிப்பாகவே கொள்ளப்படும். ஆதலின் இத்தகைய இயல்புடையனவும் இத்தொனி வகையைச் சார்ந்தனவேயாம். இவ்விதமே பிற அணிகளும் இத்தொனி வகையில் தோன்றலாம். இலக்கியங்களுள் வந்துழி வந்துழிக் காண்க.

## பொருளாற்றலாற் றோன்றுந் தொனி.

சொல்லாற்றலை வேண்டாது பொருளொன்றே வேறொரு பொருளைக் குறிப்பால் உணர்த்துமானல் அது பொருளாற்ற லாற் றோன்றுந் தொனியாம்.

'கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயு மோடா நிலத்து.

331

இதனுள் தேரினியல்பும் நாவாயின் இயல்புமே செம்பொருளாக அமைந்துள்ளது. தேரும் நெடியது. காலும் (சக்கரமும்) வலியனவே. ஆயினும், அது கடலில் ஓடாது. கடலில் ஓடுவது நாவாய். அந்நாவாயோ நிலத்திற் செல்லாது. இவ்வளவே இங்கே காணப்படுகின்றது. ஆனல் இக்குறட்பா இவ்வளவில் அமைந்து விடுவதில்லை. இச்செய்தி கூறப்படுகின்ற இடம் 'இடனறிதல்' என்ற அதிகாரம். இது 'எவர்க்கும் செல்வாய் என்று ஒன்று உண்டு. அரசன் அதனை அறிந்து அதற்கேற்ப வினை செய்தல் வேண்டும்' என்பதையும் அறிவிக்கின்றது. தண்டோபாயத்தை மேற்கொண்டு பொரக் கருதுகின்ற அரசன் தான் வேறற்குரிய இடமறிந்து தானே பொருதல் வேண்டும். இவ்வுண்மையை உணர்த்துகின்றது இது. இங்கே சொல்லாற்றலைப் பற்றிய கவலைகிடையாது. செம்பொருளாக அமைந்த இச்செய்தியே இவ்வுண்மையைக் குறிப்பாற்றலாற் றோற்றுவிக்கின்றது. ஆதலின் இது பொருளாற்றலாற் றோன்றுந் தொனி எனப்படுவதாயிற்று. 'இனிய வுளவாக' என்பதனுள் காணப்படுவதும் இவ்வகையைச் சார்ந்ததே.

குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற வெல்வளைக் குறுமகள்
ஆயரி நெடுங்கண் கலிழச்
சேய்த்தாற் றெய்ய நீபிரியு நாடே.

வரைவிடை வைத்துப் பிரிவல் என்ற தலைமகற்குத் தோழி உடன்படாது கூறியது இது. இதனுள் நீ பிரிந்து செல்லக் கருதுகின்ற நாடு சேய்மைக்கண்ணது என்பதே கூறப்படுகின்றது. இச்செம்பொருளடியாகக் குறிப்பாற் றோன்றுவதே தோழியின் உடன்படாமைக் கருத்து. இத்தகையனவும் இத்தொனிவகைக் குரியனவே.

'அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

உடன் போக்குரைத்த தோழிக்கு அதனருமை கூறி மறுத்தது. இது தலைவன் கூற்று. அனிச்சமும் அன்னத்தின் தூவியுங்கூட அத்தலைவியின் அடிகளுக்கு நெருஞ்சிப் பழமாம். இது செம்

பொருள். இதனால் தோன்றுவது என்? 'அத் தலைவியின் அடிகள் அத்துணை மென்மை உடையனவாம். அவை 'பாத்திய யன்ன குடுமிக் கூர்ங்கற்' களையுடைய வெஞ்சுரத்தை யாங்ஙனம் கடக்கும்? அது இயலாது என்று இக்குறிப்புத் தோன்றிய பிறகே இது உடன் போக்கு மறுத்ததாக அமைகின்றது. எனவே இத்தகைய இலக்கியங்களும் பொருளாற்றலாற் றோன்றும் தொனிவகைக்குரியனவே.

மறலித் திசையின் மலயா சலமென
விருத்திய துருத்திகொண் டிளங்கால் பரப்பிக்
காவுலைப் பல்லவக் கனலு வசைப்பக்
குறைவறு குயில்வாய்க் குறட்டினி லடக்கிப்
பொறிதிக ழரிக்கரி யதனிடைச் சொரிந்து
ளிசைத்திடு மஞ்சரிப் பசைக்கோ லசைத்து
மன்மத வீரனுக்கு வசந்தக் கருமான்
பனிமலர்ச் சாயகம் பண்ணி நீட்டினன்.

இதனுள் இறுதி இரண்டடிகள் இன்றியமையாதன. காதலரது காதல் கரையிறப்பச் செய்கின்ற இளவேனிலின் எழிலுடைத் தோற்றம் இங்கு குறிப்புப் பொருளாக அமைந்துள்ளது, ஆதலின் இஃதும் பொருளாற்றலாற் றோன்றுந் தொனியாயமைவதே.

## இவ்வழியிசைத் தொனியின் உட்பிரிவுகள்.

இங்ஙனம் சொல்லாற்றலாலும் பொருளாற்றலாலும் தோன்றுகின்ற இவ்வழியிசைத்தொனி தனிச் சொல்லாலமைவதும் சொற்றொடராலமைவதுமென ஒவ்வொன்றும் இரண்டிரண்டு வகைப்படுகின்றது.

'அனிச்சமும்' என்று தொடங்குங் குறட்பா சொற்றொடராய் நின்று பொருளாற்றலாற் றோன்றுந் தொனியைத் தோற்றுவித்தமை மேலே காட்டப்பட்டது. அதனுள் நெருஞ்சிப் பழம் என்றிருப்பதையுங் கூர்ந்து காண்க. 'முள்வலிதாதலுடைமையின் பழம் என்றான்' என்கின்றார் பரிமேலழகரும். இதனையுஞ் சேர்த்துச் சிந்திக்குமிடத்து இதன் குறிப்பும் நன்கு புலப்படும். அவ்வடிகளின் மென்மைக்கு முள் நினைவுங்கூட வருத்தஞ்

333

செய்வதாம். இஃதுங் குறிப்பாகவே காணக்கிடக்கின்றது. இவ் வகையின தனிச்சொல்லாற் றோன்றுவனவாம்.

இதன்மேலும் பொருளாற்றலாற் றோன்றும் இவ் வழி யிசைத்தொனி கவிக்கூற்ருல் அமைவதும் கவி கற்பிக்கின்ற கூறுவோர் கூற்ருலமைவது மென இரண்டு பாகுபாட்டையும் உடையது. 'கடலோடா' எனவருங் குறட்பாவினுள் தோன்று வது கவிக்கூற்ருலமைவதாகின்றது. 'அனிச்சமும்' என்பத னுள்ளும் தோன்றுவன கவி கற்பிக்கின்ற கூறுவோர் கூற்ரு லமைவன.

இங்ஙனமாகச் செஞ்சொல்லாற்றலாற் றோன்றுந்தொனி சொல்லாற்றலாற் றோன்றுவதும் பொருளாற்றலாற் றோன்று வதுமாக இரண்டு வகைப்படு மென்பதும், சொல்லாற்றலாற் றோன்றுந் தொனியும் சிலேடையும் வெவ்வேறு இயல்புடை வென்பதும், சொல்லாற்றலாலும் பொருளாற்றலாலும் தோன்றுகின்ற இவ்விருவகைத் தொனியுங்கூடத் தனிச் சொல்லாலமைவதும் சொற்ருெடராலமைவதுமாக ஒவ்வொன் றும் இரண்டிரண்டு பகுதிப்படுமென்பதும், பொருளாற்றலாற் றோன்றுவதனுள்ளும் கவிக்கூற்ரு லமைவதும் கவி கற்பிக் கின்ற கூறுவோர் கூற்ருலமைவதும் உண்டென்பதும் நினைவில் நிறுத்தற் குரியனவாம்.

---

தருமபுர ஆதீன வெளியீடு.

"திருக்குறள் - உரைவளம்" பொருட்பால்

கிரௌன் 1 x 4 சைஸ் 1128 பக்கங்கள்.

காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0

தபாற்செலவு வகையரு ரூ. 1—8—0

கிடைக்குமிடம் :- K. பாலநாதன், செயலாளர், 'ஞானசம்பந்தம்' காரியாலயம், தருமபுரம், மாயூரம் P. O.

அறத்துப்பால் கைவசம் இல்லை.

---

33அ.

# தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவம்

## திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

### தொடக்கநாள் 4—6—52 அன்று

## ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்

# ஆசியுரை.

பெருமக்களே! பேரன்பர்களே!

இன்று ஒரு சிறந்த நல்ல நாள்; குருஞானசம்பந்தப் பெருமான் திருநாளில் முதல்நாள். அந்த நாளிலே ஒரு நல்லவரைக் காண்கிறீர்கள். அவர்கள் உலகத்துக்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள். இவர்கள்தான் இந்தப் பெரியவர்கள், இவர்கள் இன்று திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டைத் தொடங்கிவைக்க இசைந்து இங்கு வந்துள்ளார்கள். அவர்கள் துணைகொண்டு இந்த மாநாடு தொடங்குகிறது. இந்நாள் குருஞானசம்பந்தப்பெருமானின் திருநாள். அதிலும் திருமுறைத்திருநாள். குருஞானசம்பந்தப்பெருமான்,

'திருமுறைகள் ஓதாய் மனமே உனக்கென்ன வாய்'

என்று அழகாகக் கூறியுள்ளார்கள். அத்தகைய ஆசாரிய மூர்த்திகளின் ஞான பரம்பரையில் வந்த இந்த மடம் இன்று இந்நிலையில் வளர்ந்தோங்கி வந்திருக்கிறது. இந்த நன்னாளில் இந்த நிகழ்ச்சி ஒரு நல்லாரைக்கொண்டு தொடங்கும் பேறு பெற்றிருக்கிறது, இது ஒரு பெரும்பேறு. அந்தப்பெரியார் அவர்கள் இந்த மாநாட்டைத் தொடங்கிவைப்பார்கள். மற்றொருவர் ஸர். பி. டி. இராஜன். அவர்கள் முருகன் பக்தியில் திளைத்தவர்கள். தமிழ்நாட்டைத் தன்னிலையடையச்செய்யும் வழிவகைகளை இடையறாது செய்துவருபவர்கள். அத்தகைய

335

ஒரு பெரியார் இந்தமாநாட்டைத் திறந்துவைப்பார். அடுத்துத் தலைமை தாங்க இருக்கின்றவர்கள் உயர் நீதிமன்றத்து உயர்நீதிபதி. அவர்கள் பலமொழியிலும் பாண்டித்யம்பெற்ற வர்கள். அத்தகைய நடுவுநிலைமையோடு நீதி வழங்கக்கூடிய ஒருவரே இந்த சபைக்குத் தலைவராக இங்கு இருக்கிறார். அவர் தலைமை தாங்கி இம்மாநாட்டைச் சிறப்பிப்பார்.

அன்பர்களே! இந்த மாநாடு மக்களுக்குத் தெய்வபக்தி உண்டாக்கவேண்டும் என்ற நோக்கத்தாலே ஏற்படுத்தப் பெற்ற மாநாடு. மக்களெல்லோரும் இடையறாது தெய்வ நெறியைத் துணையாகக்கொண்டு வாழவேண்டும் என்பதை அப்பர்அடிகள் அழகாகக் கூறுகிறார். என்னசெய்யவேண்டும்? ஐயனே! அரனே! என்று வாய்விட்டுச் சொல்லவேண்டும்; அதுவே மக்கள்நிலையை உயர்த்தும்மந்திரங்களாகும். மனிதன் விரும்புவது சிறப்பாக இம்மை இன்பம்; மறுமை இன்பத்தை யும் புறக்கணித்தல் கூடாது. அதுதான் பேரின்பம். அந்தப் பேரின்பம் இறைவனோடு ஒன்றுபட்டால் கிடைக்கும். நினைத் தொறும், காண்தொறும், பேசுந்தோறும், எப்பொதும் ஆனந்தத்தேனாக இருந்து இனிக்கச்செய்யும். அந்தக் கருத்தை உள்ளத்துக்கொண்டேதான்,

ஐயனே அரனே என்று அரற்றினால்
உய்யலாம் உலகத்தவர் பேணுவர்
செய்யபாதம் இரண்டும் நினையவே
வையம் ஆளவும் வைப்பர் மாற்பேறரே.

என்று அடிகள் அருளியிருக்கிறார்கள். இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் ஒருங்கே பெறுதற்குரிய வழியினை அறி விக்கும் பாடல் இது. உலகத்தாரால் போற்றப்பெறுதல் இம்மைக்குரியது; உய்திபெற்று வீட்டுநெறியடைதல் மறு மைக்குரியது. ஆதலால் எல்லாமக்களும் இறைவனுடைய திருநாமத்தை இடைவிடாது ஓதவேண்டும், அம்மந்திரத்தைச் சொன்னால் உலகத்திலுள்ள மக்களெல்லோரும் அவரே

தலைவரெனக் கொண்டாடுவார்கள். இறைவனுடைய திருநாமத்தை இடைவிடாது பேசினால் போதுமானது, அதுவே நாம் செய்யவேண்டுவது. இதுபற்றியேதான் ஞானவள்ளலாகிய குருஞான சம்பந்தப்பெருமான்,

" ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய் "

என்ற ஞானபொக்கிஷமாகிய திருப்பாடலை நமக்கு அருளியுள்ளார்கள். அந்தப்பாடலை அளித்த அப்பெரியாரின் திருவிழாநாளில் முதனாளாகிய இன்று தொடங்கப்பெறும் திருமுறைத்திருநாள் நமக்கு ஒரு பெருவிருந்தாக இருக்கிறது, இம்மாநாடு இப்பொழுது தொடங்கப்பெறுகிறது. தொடங்கி வைக்கும் பெரியார் அவர்களுக்கும், திறப்பாளர்க்கும், தலைவர்க்கும் ஆதீனத்தின்சார்பிலே இப்பொழுது வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பெறும். இம்மாநாட்டு நிகழ்ச்சி நன்குநடைபெற இங்குக் குழுமியிருக்கும் உங்கள் அனைவர்க்கும் சொக்கலிங்கப்பெருமான் திருவருள் பெருகுவதாக. பேருரைகளைக்கேட்டுப் பெருமானின் பேரன்பிற்கு உரியவர்களாவீர்களாக

---


## " ஞானசம்பந்தம் "

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

**திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.**

**ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.**

**செயலாளர்,**
**" ஞானசம்பந்தம் " காரியாலயம்,**
**தருமபுரம், மாயூரம் P. O.**

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில்

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி

## ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள் அ

### அருளிய தொடக்கவுரை.

திருநெறிய தமிழ் என்பது ஒரு அருமையான சொற்றொடர். ஞானசம்பந்தப்பெருமானின் முதல் திருமுறையிலே முதல் பதிகத்திலே கடைசிப்பாட்டில் காணப்படுவது. 'அருநெறியமறை' என்ற பாட்டிலே "திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே" என்கிறார். அப்படிப்பட்ட சொற்றொடரைப் பெயராக வைத்தது இருக்கிறதே ரொம்பப் பொருத்தம். இது தெய்வத்தமிழில் வைக்கப்பட்ட பெயர். ஆதீனத்திலே ஒவ்வொன்றும் பொறுக்குமணிகளாக விளங்குகிறது. இந்த மாநாட்டின் பெயரிலிருந்தே இது தெரிகிறதல்லவா, இந்தக்காலத்திலே இப்படிப்பட்டதான மிகப்பெரிய விழா நடத்துதலினால் பகவான் அநுக்கிரகம்செய்வார், சிலர் உலகத்திலே கேவலமான முறையிலே தப்புப் பிரசாரங்களில் ஜனங்களைஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்தமாதிரி உலகம் இருக்கிறதால் மழையே இல்லாமற் போய்விட்டது. இதற்காக பகவானிடம் பிரார்த்தனை செய்தார்கள். சென்னையிலே ஜனங்கள் மழையில்லாமல் தவித்துக்கொண்டிருந்தார்கள். பகவானுக்குப் பிரார்த்தனை செய்ததும் பத்துநாட்கள் மழை பெய்துவிட்டது, போதுமா? போதுமா? என்று கேட்கிற மாதிரி மழைபெய்தது. பகவான் இல்லை அது கல்சாமிதான் என்று பேசிவந்தவர்களுக்கும் பெய்தது மழை.

சிலர் சொல்லுவார்கள். சூரிய வெப்பம் இருக்கிறது; சமுத்திரம் இருக்கிறது; அதனாலே மழை பெய்திருக்கிறது என்று. சமுத்திரமும் சூரியனும் எப்பொழுதுமே இருந்து

வருகின்றன. ஆனால் மழை இப்பொழுது மட்டும் ஏன் பெய்தது? பகவானுக்குப் பிரார்த்தனை செய்ததனால் அல்லவா? நமக்குப் பகவான் இந்தச் சமயத்தில் உதவி ...ய்தார். அப்படிச் செய்வதுதான் ஈச்வரனுடைய கடமை. ...லகத்திலே ஜனங்களிடத்திலே கீழ்த்தரமான பிரசாரம் ...து. 'இந்தமாதிரி ஜனங்கள் இருக்கிற நிலையிலே ...பசாரம் ஈச்வரனிடத்திலே ஏற்படக்கூடாது ...பகவான் நமக்கு அறிவித்தார். அது ஈச்வரன் ... கீழ்த்தரமான பிரசாரம் அதிகமாக ஆகக் கஷ்டம் ...றது. இந்தமாதிரி நாஸ்திகர்கள் எல்லாம் பேசிக் ...காண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கஷ்டம் வர வேண்டும் என்று நாம் பேசக்கூடாது. ஒருவன் நாள்தோறும் தவறு செய்கிறான். காங்கிரஸ்காரர்களும் தவறு செய்கிறார்கள். ஆகையால் குற்றத்தை நினைக்கக்கூடாது. அவர்கள் சார்பாகவும் ஈச்வரன் சந்நிதானத்தில் போய் அவர்கள் செய்த அபசாரத்தைப் பொறுத்து உலகிலே பஞ்சம் இல்லாமல் செய்யவேண்டும் என்று சொல்லி, ஏதோ தவறான பிரசாரத்தினாலே அவர்கள் மனம் மாறிப்போயிருக்கிறார்கள் ஆகையால் ஈச்வரனே அந்தத் தவறை மன்னித்துக்கொள்ளும் என்று பிரார்த்தனை செய்யவேண்டும். எல்லோருடைய அபசாரத்தையும் என் சார்பாக நீக்கவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்ளவேண்டும். நாஸ்தீகவாதம் மிகவும் பரவிக்கொண்டிருந்த இந்தக்காலத்தில் – இராஜன் பைத்தியக்காரத்தனமாக நடக்கிறார் என்று ஜனங்கள் எண்ணுகிற காலத்திலேயே யார்போனாலும் சரி, மதிப்புப்போனாலும் சரி நாடெங்கும் எதிர்ப்பு வந்தாலுஞ்சரி அதற்குப் பயப்படக்கூடாது என்று எண்ணி ஐயப்பனைத் தலையில் வைத்து ஊர் ஊராய்ச் சுற்றினார். அப்பேர்ப்பட்ட தெய்வபக்தி உள்ளவர். இவர் தராசு முனையிலே இருக்கிறவர். தராசுக் கட்சியிலிருந்து தானே இன்று வந்திருக்கிறார் நமது ராஜன்?.

எங்கு பார்த்தாலும் இப்பொழுது அரகர சப்தம் எழ வேண்டும், இந்த நாட்டிலே, கூட்டத்திலே எவ்வளவு சப்தமிருந்தாலும், அரகர என்று சொன்னவுடனே எல்லாம்

அடங்கிவிடும். அந்த முறையிலே எங்கே இருந்தாலும் எவ்வளவு சப்தமிருந்தாலும் அரகர என்று ஒருவர் சொன்னவுடனே எல்லோரும் சொல்லவேண்டும், ஞானசம்பந்தப் பெருமான் வாக்கிலே தோன்றிய இந்த நாமத்தை எங்கே பார்த்தாலும் சொல்லவேண்டும். இந்த மாநாட்டை இந்த ஆதீனத்திலிருந்து ஆரம்பித்து விடவேண்டியது; இதன் எதிரொலி எங்கும் எல்லா நாட்டிலும் கேட்கும். சிவபெருமானை அடியார்கள் வழிபட வேண்டியதற்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு. அவர் காமனைக் கண்ணுல் எரித்துக் காலனைக் காலால் உதைத்து வென்ருர். உலகத்திலே கஷ்டப்படவேண்டியதற்குக் காரணம் பிறப்பு இறப்பு இந்த இரண்டுதான். பிறந்துவிட்டால் மரணம் என்ற ஒன்று இருக்கிறது. ஜனனம் மரணம் இந்த இரண்டுந்தான் கஷ்டங்களைத் தருகின்றன. அதனுலேதான் ஜனங்களுக்குக் கஷ்டமிருக்கிறது.

இந்த ஜனனம் மரணம் என்ற இரண்டையும் வென்றவர் சிவபெருமான். அதனுலே சிவபெருமானை வழிபடவேண்டும். ஜனனத்துக்குக் காரணம் காமம். மரணத்துக்குக் காரணம் காலம். ஆனதினுலே காமனைக் கண்ணுல் எரித்தார்; காலனைக் காலால் உதைத்தார். ஆகவே அந்தப்பெருமானை வழிபட வேண்டுமானுல் இதை ஒழிக்கவேண்டும். ஆகையால்தான் சிவபெருமானுக்குப் 'பிறப்பறுக்கும் பெம்மான்' என்ற பெயர் வந்தது. 'சிவேபரமகாரணே' என்று சொல்லுகிருர். 'ஒருருவம்' 'ஓர் பொருள்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியிருக்கிருர்கள். நதிகள் எப்படி எப்படி எங்கெங்கே ஓடிச்சென்ருலும் கடைசியில் சமுத்திரத்தில் தான் போய்ச் சேரும். ஜலம் வரவேண்டுமானுல் சமுத்திரத்திலிருந்துதான் வரும். பிறகு முடிவாகச் சமுத்திரத்திற்குத் தான் போகிறது,

அந்தமாதிரி எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்கி வைத்திருக்கிருன் பகவான். நாம் எந்த உலகத்திலிருந்து வந்திருந்தாலும் முடிவாக அங்கேதான் போய்ச்சேரவேண்டும்.

நாம் ஈச்வரனுக்கு உரியவர்கள். இந்தத் தத்துவம்தான் சிவஞான போதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இது தான் இந்த உலகத்துக்குத் தெரியவேண்டும். இதுதான் இந்த ஆதீன ஸ்தம்பத்திலே எழுதப்பட்டிருக்கிறது. சிட்சா ரட்சா என்று ஆண்டவனுக்குப் பெயர். ஆண்டவன் அடிக்கவும் செய்வான் அணைக்கவும் செய்வான். அந்தக் காலத்திலே ஜனங்கள் ஈச்வரனை மறந்துவிட்டார்கள். கர்வம் உண்டாகி விட்டது. அந்தக் காலத்திலே பகவான்வந்து காப்பாற்றினர். எல்லோரும் சிவபெருமானை மறந்து இருந்தகாலத்தில் பகவான் ரட்சித்தார். பிரபு என்பவன் சிட்சிப்பவன் ரக்ஷிப் பவன். பிரபுவாக இருப்பவன் அடிக்கவும் வேண்டும் அணைக் கவும் வேண்டும். லோகப் பிரபு இந்த உலகத்திற்கு இதனைச் செய்து வருகிறர், இதுதான் இந்த உலகத்துக்குத் தெரிய வேண்டும். ஈசுவரனிடத்திலே—சிவபெருமானிடத்திலே தோத் திரத்திலும் சாத்திரத்திலும் முறையிட்டால் நம்மைக் காப் பாற்றுவார். எங்கும் பக்தி ஓங்கிவளரும். அன்பு வளரும். பயப்படவேண்டாம். அன்பு வளர்ந்தால் சந்தோஷந்தான். இந்த மாநாடு அன்பு பக்திகளை ஓங்கிவளரச் செய்யட்டும், எங்கும் அரநாமமே சூழ்க! மாநாடு நீடூழி வாழ்க.

---

*வான்முகில் வழாது பெய்க, மலிவளம் சுரக்க மன்னன்*
*கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க*
*நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க*
*மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.*

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில்

# மதுரை, ஸர். பி. டி. ராஜன் அவர்கள்

## நிகழ்த்திய திறப்புரை.

தருமபுர மகாசந்நிதானம் அவர்களே! காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களே! நியாயாதிபதி அவர்களே! தாய்மார்களே! கனவான்களே! உங்கள் எல்லோருக்கும் என் வணக்கம்.

இந்த மாநாட்டைப் பீடாதிபதி அவர்கள் ஆசீர்வாதம் செய்து ஆரம்பித்து வைத்தார்கள். அவர்கள் ஆரம்பித்த மாநாட்டை நான் திறந்துவைப்பதென்றால் எனக்கே கொஞ்சம் மனவருத்தம் உண்டாகிறது. பெரியவர்கள் பேசிவிட்டார்கள். நான் என்ன பேசுவது? வைதீகமுறையில் அவர்கள் பேசினார்கள். லௌகீகமுறையில் பேசவேண்டும் என்ற முறையில் சில வார்த்தைகள் பேசலாம் என்று முன்வந்திருக்கிறேன். நான் தமிழில் பாண்டித்யம் அடைந்தவன் அல்ல. அல்லது மதங்களைப் பற்றிப் பேசுபவன் அல்ல. மகாசந்நிதானத்தின் கட்டளைக்கு உட்பட்டுத்தான் பேசவந்திருக்கிறேன். யானும் என்னுடைய குடும்பத்தினரும் மகாசந்நிதானத்துக்குக் கடமைப்பட்டவர்கள். அவர்கள் சொல்வதை, முடியாது என்று சொல்லமுடியாத நிலையில் இருப்பவன் யான்; அதுபற்றியேதான் இப்போது பேச முன்வந்திருக்கிறேன்.

இந்தக்காலத்தின் நிலையைப் பார்க்கும்போது வருங்காலம் எப்படி இருக்கப்போகிறது? மக்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கப்போகிறது? என்று சொல்லக் கஷ்டப்படுகிறது மனம். இதை ஒருவேளை பீடாதிபதி அவர்கள் சொல்லலாம். என்னைப் போல இருக்கிறவர்கள் சொல்லவேண்டுமானால் ரொம்பக் கஷ்டம். சட்டத்தைப் பார்த்தால் சட்டத்துக்கு மதிப்பில்லை; பயமும் இல்லை; மதத்தைப் பார்க்கும்பொழுது மக்களிடையே மதிப்பும் இல்லை, நம்பிக்கையும் இல்லை. மனிதர்களை எடுத்துக் கொண்டால் மனிதர்களிடத்திலும் மதிப்பில்லை. மனிதர்களுக்குத்தான் மதிப்பில்லை என்று சொல்லிய பிறகு கடவுளைப் பார்த்தால் கடவுள்மேல் பக்தி இல்லை. நம்பிக்கை இல்லை;

அந்தமாதிரி இருக்கிறது இந்தக்காலம். எதைப்பார்த்தாலும் அதற்கு மதிப்பே கிடையாது. அந்த நிலைமையில் நமது மக்கள் இருக்கிறார்கள். இதற்கு என்னதான்செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. இப்படி சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது திருவனந்தபுரத்திலிருந்து சிலர் வந்தார்கள், 'தமிழ் நாட்டிலே ஐயப்பனை அழைத்துக்கொண்டு போகவேண்டும்' என்று சொன்னார்கள். நானும் சரி என்று சொல்லிவிட்டேன். அதனுடைய கஷ்டம் என்ன? பொறுப்பு என்ன? என்று தெரியாமல் சொல்லிவிட்டேன். எதற்காக ஐயப்பன் வர வேண்டும் என்று நினைக்கும்பொழுது மக்களிடையே இருக்கின்ற தீய மனப்பான்மை விலகவேண்டும் என்பதற்காகவே. ஆகையால் நான் சொன்னேன் சட்டத்திற்கு மதிப்பில்லை. மனிதனுக்கு மதிப்பில்லை, கடவுளுக்கு மதிப்பில்லை ஏன் என்று மக்களிடம் கேட்கும்பொழுது நாங்கள் சுதந்திரம் அடைந்து விட்டோம், ஆகையால் நாம் இனிமேல் அடிமையாக இருக்க மாட்டோம் என்கிறார்கள். அடிமையாக இருக்கமாட்டோம் என்றால் என்ன அர்த்தம்? சுதந்திரம் என்ன என்று தெரியாத மக்களிடத்திலே சுதந்திரம் கிடைத்த பிறகு நாம் கஷ்டப்பட வேண்டியதுதான்.

சுதந்திரம் என்றால் பொறுப்புத்தான். சாதாரணமாக வெள்ளையர்கள் நாட்டிலே பதினொரு மணியாகிவிட்டால் கிராமபோன், பாட்டு முதலியன பாடமாட்டார்கள். பிறர் தூக்கத்தைக் கெடுக்கக்கூடாது என்கிற பொறுப்பு அவர்களுக்கு இருக்கின்றது. நம்நாட்டிலோ 11 மணி அல்ல 12 மணி அல்ல 2 மணிக்குங்கூட இவைகள் நடக்கும்; ஏன் ஐயா பிறர் தூக்கத்துக்கு இடைஞ்சல் செய்கிறீர்கள் என்றால் அவர்கள் தூங்கினால் என்ன தூங்காதிருந்தால் என்ன என்கிறார்கள். அந்த மாதிரி இருக்கிறதே தவிர பிறருக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்கிற மனப்பான்மை இல்லாததால்தான் இந்தக் கஷ்டம் ஏற்படுகிறது. இந்தக் கஷ்டத்தை எப்படி நிவர்த்தி செய்வது என்று எண்ணிய காலத்தில் ஐயப்பனை அழைத்து வர ஏற்பாடு செய்துகொண்டேன், முதலில் விளையாட்டுத் தனமாக ஒப்புக்கொண்டேன். பிறகு என்னவாயிற்று தெரியுமா?

ஐயப்பனுக்கு ஏதேனும் ஒன்று ஆகிவிட்டால் அந்தப் பாபத்திற்கு நாம் என்ன செய்வது என்று எண்ணிய பொழுது

பயப்படாதே என்ற நம்பிக்கை வளர்ந்தது. அந்தத் தைரியத்திலே வண்டியை விட்டேன். ஐயப்பன் இந்த நாடுபூராவும் சுற்றினர். நான் எதிர்பார்க்காத அளவிலே வரவேற்பு. ஜாதிமத வித்தியாசமின்றி மக்கள் எல்லோரும் வரவேற்ருர்கள். ஓரளவுக்கு நானும் கூடவே போனேன் 'என்ன இராஜன் சாமியார் ஆகி விட்டாரே' என்ருர்கள் ஒருகாலத்தில்; நான் சாமியாகிவிடுகிறதைப் பற்றிக் கவலே இல்லே. (சங்கராச்சாரிய சுவாமிகள்: இந்த ஆதீனத்திலேயே தப்பிராஞகை ஆகிவிடுங்களேன்!) சுற்றுப்பிரயாணம் செய்து திரும்பி அனுப்பும் வரையில் எனக்கு ஒரே பயம் இருந்தது. ஐயப்பன் அருளிஞலே ஒன்றும் ஏற்படவில்லே.

ஐயப்பன் அருள் இருக்கிறது என்று, சோதனே பார்க்கும் மக்களிடத்தில் சொன்னேன். ஐயப்பனேச் சோதிக்கவேண்டாம் நம்பிக்கை இல்லாத மக்களுக்குக் கடவுள் இருக்கிருர் என்று காட்டுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. ஐயப்பன் சாதாரண சாமி அல்ல.

ஐயப்பனேப் பார்க்கவேண்டும் என்ருல் கஷ்டப்பட்டுத் தான் பார்க்கவேண்டும். அதற்கு விரதங்கள் இருக்கிறது. ஐயப்பனே எவ்வளவு கஷ்டப்பட்டுப் பார்க்கிருேமோ அவ்வளவுக் கவ்வளவு அருள் கிடைக்கும், ஐயப்பனேப்பற்றிக் கேவலமாகப் பேசுகிருர்கள். அப்படிப் பேசுகின்றவர்களும்கூட ஐயப்பன் பிரசாதத்தை வாங்கிக்கொள்ளுகிருர்கள். ஐயப்பனுடைய முக்கியமான தத்துவம் எல்லாமக்களும் சமமான முறையில் இருக்கவேண்டும் என்பது.

கம்யூனிசம் என்று சொல்லுகிருர்களே ஐயப்பனேவிட பெரிய கம்யூனிஸ்ட் கிடையாது. ஐயப்பனேக் கம்யூனிஸ்ட் என்கிறீர்களே என்று கேட்கலாம். ஆம், ஐயப்பன் பெரிய கம்யூனிஸ்ட். ஐயப்பன் என்ன சொல்லுகிருர்? எல்லா மக்களுக்கும் சந்தர்ப்பம் இருக்கவேண்டும் என்றுசொல்லுகிருர். நம்முடைய கம்யூனிஸ்டுகள் வார்த்தை அளவிலேதான் சொல்லுகிருர்கள். அவர்கள் சொல்லுவது எல்லாம் ஒழிக ஒழிக என்பதுதான். அவர்களது கம்யூனிசம் எல்லோரும் ஒழிய வேண்டும் என்பதுதான். ஆஞல், ஐயப்பன் கம்யூனிசம் வாழ்க வாழ்க என்பதுதான். வாழ்க வாழ்க என்பது எவ்வளவு

344

இனிமையாக இருக்கிறது. தமிழின் இனிமையான வார்த்தையல்லவா அது? வாழ்க வாழ்க என்று சொல்லும்பொழுது எவ்வளவு இனிமை. ஒழிக ஒழிக என்று சொல்லும்போது எப்படி இருக்கிறது? நமக்குத் துரோகியாக இருந்தாலுங்கூட அவர்களை ஒழிக என்று சொல்லக்கூடாது.

இன்றையதினம் மக்களுக்குத் தமிழின்மீது நம்பிக்கை இருக்கிறது. தமிழுக்கு மதிப்பு இருக்கிறது. ஒரு காலத்தில் நான் ஆங்கிலம் படிக்கவேண்டும், தமிழ் படித்தால் கேவலம் என்று எண்ணியதும் உண்டு. ஆங்கிலம் படித்ததில் உத்தியோகம் கிடைத்தது. நான் ஆங்கிலம் படிக்கக்கூடாது என்று சொல்லுபவன் அல்ல. இப்பொழுது மக்களுக்கு ஒரு ஆர்வம் இருக்கிறது. அந்த ஆர்வத்திற்கு நாம் எவ்வளவு ஊக்கம் கொடுக்கவேண்டுமோ அவ்வளவு ஊக்கம் கொடுக்க வேண்டும். நெடுநாளாக நம்முடைய பெரியவர்கள் பெரிய சேவைகளைச் செய்து இருக்கிறார்கள், அவர்களைப் பார்த்து 20 ஆண்டுகளுக்குமேல் இருக்கும். அவர்களை மறுபடியும் பார்க்கவேண்டும் என்ற விருப்பம் உண்டு. ஆனால் என்னுடைய விருப்பப்படியே நடக்கவில்லை. இன்று ஒரு நல்ல நாள். இன்று அவர்கள் முன்னிலையிலேயே பேசும்படியான வாய்ப்பு கிடைத்தது பெரும் பாக்கியம். என்கையிலே தராசு இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். ஆனால் இங்கு இருக்கின்ற நியாயாதிபதி அவர்கள் கையில்தான் தராசு இருக்கிறது. இப்படிப்பட்ட சபையிலே நான் பேசுவது எனக்குப் பெருமை.

நான் பேசுகின்ற இடத்தில் எல்லாம் தமிழ்ச்சங்கத்தைத் திரும்பவும் புதுப்பிக்கவேண்டும் என்றே கூறி வருகிறேன். தமிழ்ச்சங்கத்திற்கு உயிர்கொடுத்தவர் சேதுபதி ஒருவர்தான். கலைகளுக்கும், தமிழ்மொழிக்கும், தமிழ்ப் பண்புகளுக்கும் அவர்கள் புத்துயிர் அளித்தார்கள். இப்பொழுது நோய்வாய்ப்பட்டுச் சாகுந் தறுவாயிலிருக்கும் அச்சங்கத்திற்கு இன்ஜக்ஷன் கொடுத்து என்றும் சாகாமல் முதிராமல் செய்யவேண்டும். பெரியவர்கள் இங்கு இருக்கிறார்கள் அவர்கள் மனம் வைத்தால் எல்லாம் நடக்கும். அந்தச்சங்கம் வந்தது என்றால் அவர்களுடைய பணி முடிந்தது. அவர்களுடைய முதற் கடமை என்ன? மக்களிடத்திலே கடவுள் பக்தியை வளர்ப்பதுதான் கடவுள் இடத்தில் பக்தி வேண்டும், நம்பிக்கை வேண்டும் என்று

சொல்வதுதான், இந்த நாட்டுப் பக்தர்கள் தமிழிலேயே பேசக் கூடியவர்கள். அவர்களுக்குப் பக்தியைவளர்ப்பதற்குத் தமிழின் வாயிலாகவே செய்யமுடியும். நான் சம்ஸ்கிருதமோ இந்தியோ கூடாது என்று சொல்லுபவன் அல்ல. ஆனால் கட்டாயமாக்கக் கூடாது என்று சொல்பவன். நானும் ஒருகாலத்தில் சமஸ்கிருதம் படித்தவன், லலிதாசகஸ்ரநாம பாராயணம் செய்துவருகிறேன். இப்பொழுது தமிழ்ச்சங்கத்திற்குப் புத்துயிர் அளிக்கத் திட்டம் போட்டிருக்கிறோம். சந்நிதானம் அவர்களும் பீடாதிபதியும் ஆசீர்வாதம் அளித்தார்கள் என்றால் நான்காவது சங்கத்தை நல்லமுறையில் ஆரம்பித்து நடத்தலாம். [சங்கராச்சாரிய சுவாமிகள்: தெய்வத்தமிழ் என்று ஆரம்பியுங்கள்,] முத்தமிழ் மாநாடாக மதுரையில் ஆரம்பித்துவிட்டோம். உங்களுடைய ஆசீர்வாதம் பெரும்பயன் தரும்.

ஆதீனத்தின் கட்டளைக்காக நான் இங்கு வந்தேன். எதிர் பாராத அளவிலே கோயம்புத்தூரிலே நாளைக்கு இருக்கவேண்டி யிருக்கிறது. நான் உத்தரவு வாங்கிக்கொள்ளுகிறேன். மன்னிக்க வேண்டும். அறிஞர்கள் கூடியிருக்கின்ற இடத்தில் இருப்பது பெருமை. பேசுவது என்றால் அதைவிடப் பெருமை. இதையெல் லாம் விட்டுவிட்டு நான் போகவேண்டுமென்பது ரொம்ப வருத்த மாக இருக்கிறது. கூடிய விரைவிலே எல்லா ஆதீனங்களும் ஒன்று சேர்ந்து இருக்கிற இடத்திலே - பேசக்கூடிய இடத்திலே சந்திக்க நேரும் என்று எண்ணுகிறேன். அப்படி நீங்களும் விரும்பினால் நேரும். பெரியவர்கள் எல்லாம் திறந்து வைக்கும் பெருமையுடைய இம் மாநாட்டை நான் திறந்து வைப்பது என்றால் பொருத்தமா? தமிழ் நாட்டைக் காப்பாற்றுபவன் முருகன். நம் தலைவரைக் காப்பாற்றுப்வன் முருகன். அவன் தான் நம்முடைய நாட்டையும், நம்முடைய மக்களையும் காப்பாற்றுபவன். அப்பா நீ காப்பாற்றுவிட்டால் யார் காப்பாற்ற முடியும்? நீதான் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லி இந்த மாநாட்டைத் திறந்துவைக்கின்றேன். நியாயாதி பதி வேங்கடராமையர் அவர்கள் தலைமை வகிப்பார்கள். இப்பேர்ப்பட்ட நல்லோர்கள் கூடியிருக்கின்ற சபையில் எல்லாம் சிறப்பாக நடக்கும். அதுவும் முருகப் பெருமானின் கிருபையால் எதுநடவாது? ஆகவே இந்த மாநாட்டைத்திறந்து வைக்கிறேன். எல்லோருக்கும் வணக்கம்.

# திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டில்

சென்னை உயர்மன்றத்து உயர்தர நீதிபதி

## கனம், பிர்மஸ்ரீ T.L. வேங்கடராமையர் அவர்கள்

### நிகழ்த்திய தலைமையுரை.

மகாசந்நிதானம் அவர்கட்கும், ஆச்சாரியாள் திருவடிகட்கும் என்னுடைய நமஸ்காரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்குள்ள ஏனையோர்களுக்கும் நமஸ்காரம்,

இந்த மகாநாட்டின் நோக்கமாவது, தமிழ்நாடெங்கும் தெய்வ பக்தியைப் பெருகச்செய்வது. இந்த மகாநாடு ஒரு தனிச்சிறப்போடு அமைந்திருக்கிறது என்று நான் சொல்ல வேண்டியதில்லை. நமது சமயாசாரியரவர்கள் மகாநாட்டில் நேரில் விஜயம்செய்து நமக்கு இதமொழிகள் கூறியது முதலில் சொல்லத்தக்கது, இன்று முதல் 10 நாட்கள் ஞானாம்பிகா ஸமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வரருக்கு மகோத்ஸவம். இன்று துவஜாரோஹணம். திருநெறிய தெய்வத்தமிழ் மகாநாடும் இன்று ஆரம்பமாகி இன்னும் பத்து நாட்கள் நடைபெறும். தேவாலய உத்ஸவங்களில் கூத்தும் ஆரவாரமும் முக்கியமல்ல, ஆண்டவன் பக்தியில் மனதை ஈடுபடுத்துவதே முக்கியம். ஆகவே உத்ஸவத்தோடு இந்த மகாநாட்டை வைத்திருப்பது மிகவும் பொருத்தமானது. இன்னும் ஒரு விசேஷம், இந்த மடம் ஸ்தாபனம்செய்த ஸ்ரீ ஞானசம்பந்த குருவின் குருபூஜையோடு இந்த மகாநாடு முடிவுபெறும். நமதுதேசத்தில் குருபக்தியைப் பார்க்கச்சிறந்தது வேறொன்றுமில்லை, வேதங்களிலும், புராணங்களிலும் இது நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குருவை நாம் தெய்வமென்றே போற்றுகிறோம். ஆகவே இந்த மகாநாடு, குருபூஜையோடு சேர்ந்திருப்பது ஒரு பெரிய விசேஷம்.

பாரததேசத்தில் உள்ள செல்வங்களில் முக்கியமானது எது என்று கேட்டால், அது ஜனங்களுடைய தெய்வ பக்தியும், அதற்குரிய தத்துவ ஞானமுந்தான். இச்செல்வம்

3‍47.

விலையற்றது. என்றும் அழியாதது. இது வேதம்தோன்றிய காலமுதல் நம்முடைய தேசத்தில் நிரந்தரமாய் உள்ளது.

தமிழ்நாட்டில் இதை விசேஷமாகக் காணலாம். இங்குப் பிறந்த பக்தர்களுக்குக் கணக்கே கிடையாது. தேவாரம் பாடின மூவர்களும், மணிவாசகரும், நாயன்மார்களும் பிறந்த நாடு தமிழ்நாடு, ஆதி சங்கரர்போன்ற பல வேதாந்திகள் தோன்றியதும் தமிழ்நாட்டிலே இந்த பக்த பரம்பரை இப்போதும் தொடர்ச்சியாக வந்துகொண்டே இருக்கிறது. நாம் நேரில்பார்த்த பெரியாரில் ஒருவர் ரமண மகாரிஷி. இப்பொழுதும் இங்கேயும் நமது நடுவில் பல மகான்கள் இருக்கிறார்கள். இந்தச் செல்வத்தில் நம் நாடு நிகரற்றது என்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.


இப்படி தெய்வபக்தி வளர்ந்த இந்நாட்டில் சில விபரீதமான பேச்சுக்களும் வாதங்களும் ஏற்பட்டிருக்கிற தென்பதைப்பற்றி முன் பேசினவர்கள் வருத்தத்துடன் கூறினார்கள். இதைச் சீர்திருத்துவதுதான் இந்த மகாநாட்டின் நோக்கம்.

சுமார் 1500 வருஷங்களுக்குமுன் இந்த நாட்டில் நடந்த சில சம்பவங்களை நாம் இப்போது கவனிக்கவேண்டும். சைவம், வைஷ்ணவம் என்ற பக்திநிறைந்த இந்த தேசத்தில் தெய்வமேது என்ற வாதம் ஏற்பட்டது. பௌத்தர்கள் நம் நாட்டில் அவர்கள் மதத்தைப் பிரசாரம் செய்தார்கள். ஜைனரும் நம் நாட்டில் குடியேறினார்கள். பௌத்தர்களும் சமணர்களும் யுக்திவாதம் செய்து ஜனங்களுடைய மனதைக் கலைத்தார்கள். அதன் காரணமாக வைதிக சிரத்தை குறைந்தது. அரசர்களும் அன்னிய மதங்களைத் தழுவி நம்முடைய மதத்தை ஆதரிக்காமல் இருந்தார்கள். சைவ வைஷ்ணவ பக்தர்கள் வெளியில் வருவதற்கே பயந்தார்கள். தற்காலம் நம் தேசநிலை மாதிரியே அப்போதிருந்தது. அப்போது கருணைக்கடலான ஆண்டவன் அநேக பக்தர்களை நம் நாட்டிற்கு அனுப்பினார், அவர்கள்தான் நம் நாயன்மார்களும் ஆழ்வார்களும் அவர்கள்தான், நம் நாட்டில் மறுபடியும் சைவம் வைஷ்ணவம் என்ற மதங்களின் பெருமையை நாட்டி

எல்லா ஜனங்களையும் தெய்வநெறியில் திருப்பினார்கள். அது முதல் இத்தேசம் தொண்டர்நாடாகவே விளங்கிவருகிறது,

அப்படிப்பட்ட இந்த நாட்டில், மறுபடியும் ஏன் ஜனங்களுடைய மனது மாறிற்று. எப்படி நாஸ்திக வாதம் புறப்பட்டது என்பதை நாம் விசாரிக்கவேண்டும். இதற்கு நாம் நம்முடைய சிறுவர்களைக் கவனியாமலும், அவர்களுக்குச் சரியான முறையில் கல்வி கற்றுக்கொடாததுமே காரணம். அவர்கள் என்ன படிக்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று நாம் கவனியாததால் ஏற்பட்டது இந்த விபரீதம். ஐந்து இந்திரியங்களும் வெளித்தோற்றமுள்ளவை. அவைகளால் வெளியில் உள்ள விஷயங்களை மாத்திரமே பார்க்கமுடியும். இறைவர் நமது இதயத்தில் உள்ளே இருக்கிறார். அவரைப் பார்க்க, முகக்கண் போதாது. அகக்கண் வேண்டும். அகக்கண்ணால் பார்ப்பதற்கு மனமே முக்கிய ஸாதனம். அது நிர்மலமாய் இருந்தால்தான் ஆண்டவனை நாம் பார்க்கமுடியும். ஆகவே மனதைச் சுத்தம் செய்வது தான் நாம் முதலில்செய்யவேண்டியது. செழிப்பான நிலத்தை ஒவ்வொரு தடவையும், ஏர் உழுது, தக்க உரம்போட்டு, சாகுபடி செய்தால், நல்ல பயிரைக் கொடுக்கும். ஒரு தரம் உழாவிட்டால் புல்முளைத்துவிடும். நல்ல பயிர் விளையாது. வெகுகாலம் சாகுபடி செய்யாவிட்டால் அது காடாகிவிடும். முள் முளைத்துவிடும். நம்முடைய மனமும் அப்படிப் பட்டதேயாகும். ஒவ்வொருநாளும் அதை நாம் கட்டுப் படுத்தி நல்ல வழியில் திருப்பவேண்டும். இதற்காகத்தான் நித்தியாநுஷ்டானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. காலையில் ஸ்நானம் செய்து, சுவாஸத்தை அடக்கி, மனதை நிறுத்தி, ஈச்வரனைத் தியானம் செய்கிறோம். அம்மாதிரி மத்தியானத் திலும், சாயங்காலத்திலும் செய்கிறோம். இந்த முறையை இக்காலத்தில் ஜனங்கள் பெரும்பாலும் கைவிட்டபடியால் மனம் அவர் வசம் நில்லாமல் அது போனபோக்கெல்லாம் போகிறார்கள். அது அவர்களை வெளியில் உள்ள விஷயங்களிலேயே இழுத்துக்கொண்டு போகிறது; உள்ளத்தில் இருக்கும் இறைவனைப் பார்க்கமுடியவில்லை. நிலத்தை உழு

திருவஞ்சைக்களத்தில்:



இரு மகாசந்நிதானங்கள்

துறைசை    தருமை

தால் எப்படி அது பயிருக்கு யோக்யமாகுமோ, அம்மாதிரி அனுஷ்டானங்கள் செய்தால் மனம் நல்ல பயிற்சியை அடையும். அப்பேர்ப்பட்ட மனத்தில் குருவின் உபதேசங்கள் நெற்பயிர்போல நன்ருக விளையும். பக்தர்கள் சரித்திரங்கள், தோத்திரங்கள் இதிகாச புராணங்கள் எல்லாம் மனதிற்கு உரம்போலாகும். இம்முறையில் நாம் எல்லோரையும் மறுபடியும் ஆஸ்திகத்திற்குத் திருப்பவேண்டும்.

சமணர்கள் வியாபித்திருந்த காலத்தில், நம்முடைய முன்னேர்கள் ஜனங்களுடைய மனதைத் திருப்புவதற்குச் செய்த உபாயங்களில் இரண்டை இப்போது சொல்லப் போகிறேன். ஒன்று தேவாலயங்களில் ஆண்டவனைத்தொழுவது. இரண்டாவது மடங்களில் தத்துவங்களைப் போதிப்பது. தேவாலயங்களில் ஆண்டவனைத்தொழுவது பாமரர் பண்டிதர் இருவருக்கும் தேவையானது. மடங்களில் தத்துவங்களைத் தெரிந்துகொள்வது பண்டிதர்களுக்கே யோக்யமானது. அரிய தத்துவங்களை அறிய பாமரர்களுக்குச் சக்திபோதாது. அவர்களுக்குச் கோவில்சென்று விக்ரகத்தைத் தரிசனம் செய்து மனத்தை அதில்செலுத்தி, இறைவனைத் தோத்திரம்செய்தும், தியானித்தும், பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவதே சுலபம். இதை நன்ருக உணர்ந்த நாயன்மார்கள் ஒவ்வொருவரும் க்ஷேத்திராடனம் செய்து ஆங்காங்கும் கோயிலுக்குச் சென்று, ஆண்டவனைத் துதித்துப்பாடி ஜனங்களுடைய மனத்தைக் கவர்ந்து அவர்களைப் பக்திமார்க்கத்தில் திருப்பினர்கள். தேவாரங்கள் க்ஷேத்திரங்களை ஒட்டி இருப்பதன் ரகஸ்யம் இதுதான். அந்த க்ஷேத்திரங்களும் பாடல்பெற்ற க்ஷேத்திரங்கள் என்ற மகத்துவம் அடைந்தன. மேலும் தேவாரங்கள் பாட்டிற்கு யோக்கியமாய், இசையில் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. சங்கீதம் மனிதர் மனதை ஆகர்ஷிக்கும் சக்தி வாய்ந்தது. கவிதையைபார்க்கப் பாட்டில் ஈடுபடுபவர் பலர்; அதனல்தான் தேவாரங்களை நாயன்மார்கள் இசையோடு அமைத்தார்கள். அந்தக் காலத்தில் நாயன்மார்கள் காண்பித்த வழியைப் பின்பற்றி, தேவாலயங்களில் நாம் எல்லோரும் சென்றும், பஜனைகள்செய்தும், தோத்திரங்கள் பாடி

யும் ஜனங்களைத் தெய்வத் திருநெறியில் திருப்பவேண்டும். இரண்டாவது மடங்களின் பிரயோசனம் என்னவென்று கவனிக்கவேண்டும். மதம் நன்ருகத் தெரிவதற்கு விக்ரஹ பூஜை, தோத்திரங்கள் மாத்திரம் போதாது. தத்துவஞானம் அடையவேண்டும். புத்திமான்களுக்கு இது முக்கியமானது. இதற்காகவே, ஆதிசங்கரர் பௌத்த மதத்தைக் கண்டித்து வேதமதத்தை ஸ்தாபிப்பதற்காக, ஆங்காங்கு மடங்கள் ஏற்படுத்தினர். பின் சங்கருடைய வழியைப் பின்பற்றி, ஸ்ரீ ராமானுஜர், மத்வர் முதலியோரும் மடங்கள் ஸ்தாபித்தனர். சைவசித்தாந்த மடங்களும் இதற்காகவே ஏற்பட்டன. தெய்வத் தத்துவங்களைத் தெரிய நமது தேசத்தில் மடங்கள் முக்கியமானவை.

ஆகவே கோவிலும், மடமும் நம்முடைய மதத்திற்கு இரண்டு கண்கள்போன்றவை, இவைகளைக்கொண்டு நம்முடைய முன்னோர்கள், ஜனங்களைச் சைவம் வைஷ்ணவம் போன்ற ஆஸ்திகமதங்களில் திருப்பினர்கள். அதேமாதிரி, இப்போதும் கோவில் மடம் இவைகளை நாஸ்திகமதத்திலிருந்து ஜனங்களைத் திருப்ப, முக்யமான ஸாதனமாகக் கொள்ள வேண்டும். இந்த மகாநாடு கோவில் உத்ஸவத்தைச் சேர்ந்தும் இந்த மடத்தை ஸ்தாபித்த குருஞானசம்பந்த குருவின் குருபூஜையைச் சேர்ந்தும் நடத்துவது மிகவும் பொருத்தமானது, இங்கே பத்துநாளும், திருமுறைத் தத்துவங்களும், தேவாரங்களும், தோத்திரங்களும், இதிஹாஸ புராணங்களும் எல்லாம் வழங்கப்படும். இதை நாம்எல்லோரும் போற்றவேண்டியதே. இம்மாதிரியான முறைகளால், நாஸ்திக வாதம்செய்யும் நம் ஸஹோதரர்களுடைய மனதைத் திருப்பிவிடலாம். அவர் மேல் கோபம் கொள்ளக்கூடாது. அவர்கள் இப்படி இருக்கிருர்களே என்று வருந்தவேண்டும். நல்வார்த்தைகளால்-நற்செய்கைகளால் அவர் மனத்தைச் சீர்படுத்தி நம்மோடு சேர்க்கவே நாம் முயலவேண்டும். ஆண்டவன் அனுக்ரஹத்தாலும், குருநாதர்களின் ஆசீர்வாதத்தாலும், இந்த மகாநாட்டின் நோக்கம் நன்ருக நிறைவேறவேண்டும்.

---



தருமபுர ஆதீனம்
ஸ்ரீ அருணந்தி நிலயம் - ஸ்ரீமறைஞானசம்பந்தர் நிலயங்கள் திறப்புவிழாவில்.

திறப்பாளர் :

**துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களுக்கு வரவேற்பு.**



மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி
தேவஸ்தானத்தில்
குடிதண்ணீர்க்குழாய் திறப்புவிழா.
திறப்பாளர்,

**துறைசை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்**

# குடிதண்ணீர்க்குழாய் திறப்புவிழா

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் குமரக் கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் ஷ்டி தேவஸ்தானச் சார்பில் மக்கள் நலங்கருதி, தாமியங்கித் தண்ணீர்க்குழாய் ஒன்று வைக்கப்பெற்று, அதன் திறப்பு விழாவும் 28—5—52-ல் திருவாவடுதுறை ஆதீனம் 21-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அவர்களைக்கொண்டு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. துறைசையாதீன மகாசந்நிதானம் அவர்கள் அன்றுமாலை தருமைக்கு எழுந்தருளியாகித் திருமஞ்சனம் முதலியன முடித்துக்கொண்டார்கள். பிறகு 6-மணிக்கெல்லாம் தருமை துறைசை இரு மகாசந்நிதானங்களும் மாயூரம் குமரக்கட்டளைக்கு எழுந்தருளியானார்கள். திருக்கோபுரவாயிலிலேயே அருளிப்பாடு பார்க்கப் பெற்றது. பிறகு ஆலய வழிபாடு ஆலய சம்பிரதாயப்படி நடைபெற்றது. இவற்றையெல்லாம் முடித்துக்கொண்டு இருமகாசந்நிதானங்களும் குமரக்கட்ட[illegible] தேவஸ்தான அலுவலக மண்டபத்தில் எழுந்தருளியானார்[illegible] அங்கு வரவேற்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. [illegible] யன்பர்கள் அனைவரும் கூடியிருந்தார்கள். கடவுள் [illegible] துக்குப்பிறகு சீகாழி கட்டளை விசாரணை, வித்துவான் [illegible] சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தேவஸ்தானச் ச[illegible] துறைசை மகாசந்நிதானம் அவர்களுக்கு ஒரு வரவேற்[illegible] மலரை வாசித்தளித்தார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்[illegible] அவர்கள் அதனை அன்போடு ஏற்றுக்கொண்டு குடிதண்[illegible] குழாயைத் திறந்துவைத்தருளினார்கள், பிறகு இரும[illegible] சந்நிதானங்களும் சிறிது நேரம் அளவளாவியிருந்து தத்தம ஆதீன மடாலயத்திற்கு எழுந்தருளியானார்கள்.

## ஸ்ரீ அருணந்தி நிலையம் - ஸ்ரீ மறைஞானசம்பந்தர் நிலையம் திறப்புவிழா

தருமபுர ஆதீனத்தில் சாந்த நிலையத்தை அடுத்து ஸ்ரீ மெய்கண்டார் பெயரால் நிலையம் நிறுவப்பட்டிருப்பதை

352



அன்பர்கள் அறிவர். அதனையடுத்து ஸ்ரீ அருணந்தி நிலையமும்
ஸ்ரீ மறைஞான சம்பந்தர் நிலையமும் பெரும்பொருட் செல
வில் இப்பொழுது கட்டப்பெற்றுள்ளன. அதன் திறப்புவிழா
1—6—52 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அந்த நிலையங்
களைத் திறந்துவைத்தருளத் திருவுளங்கொண்ட துறைசை
மகாசந்நிதானம் அவர்கள் அன்று மாலை தருமைக்கு எழுந்
தருளினார்கள். தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானத்தின்
7வது ஆண்டு குருபூஜை விழாவாதலின் அன்று திருப்பனந்
தாள் ஸ்ரீ காசிமடம் ஜூனியர் ஸ்ரீமத் காசிவாசி மகாலிங்கத்
தம்பிரான் சுவாமிகள் அவர்களும் குருவழிபாட்டிற்கு எழுந்
தருளியானார்கள். மாலை 6-மணிக்கு ஆதீன மடாலயமுகப்பில்
துறைசை மகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்பளிக்க
அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் எழுந்தருளுவதற்
காக மேடை மகர தோரணங்களால் அழகுறுத்தப்பெற்
றிருந்தது. அதில் தகுந்த முறையில் ஆசனங்களும் அமைக்கப்
பெற்றிருந்தன. அன்பர்கள் குழுமியிருந்தார்கள். ஆதீனத்
தேவாரப்பாடசாலை ஆசிரியர் கடவுள் வணக்கமாகத் திரு
...றைப் பாடல்களைப் பாடினார். 6-10க்குக் கூட்டம் தொடங்
...து. தருமை மகாசந்நிதானம் அவர்கள் ஐந்தெழுத்தின்
...மையை விளக்கும் முறையில் துறைசை ஆதீனத்தின்
...மையினையும், அவ்வாதீனத்தில் விளங்கும் மகா
...னம் அவர்களின் அருங்குண நலன்களையும், ஐந்தெழுத்
...ஞானசம்பந்தம் எய்தும் சிறப்பினையும் நன்கு விளக்கி,
...த்தின் சார்பிலும் ஆதீனக் கல்வி நிலையங்களின்
...பிலும் துறைசை ஆதீன மகாசந்நிதானத்திற்கு வர
...ற்பளிக்க இருப்பதைக் குறிப்பிட்டு விழாத் தொடக்கம்
செய்தருளினார்கள்.

பிறகு தருமபுர ஆதீனத் திருக்கூட்டத்தின் சார்பில்
சீகாழி கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத்
தம்பிரான் சுவாமிகளால் வரவேற்புரை வாசித்தளிக்கப்
பெற்றது. அதனை அடுத்து ஆதீனப் பல்கலைக் கல்லூரித்
தமிழ்ப்பகுதி, சிரோமணிப்பகுதி, ஆதீனத்தேவாரப்பாடசாலை,
ஆதீன வேதசிவாகம பாடசாலை, ஆதீன குருஞானசம்பந்தர்

353

உயர்தரத் தொடக்கநிலைப் பள்ளி, ஆதீனக் கல்லூரி குருஞான சம்பந்தர் கழகம், ஆதீன ஞானசம்பந்தம் பதிப்பகம், ஆதீனப் பிரசாரகோஷ்டி இவைகளின் சார்பில் தனித்தனியே அவ்வவற்றின் நிர்வாகிகளால் வரவேற்பு மலர்கள் வாசித்தளிக்கப்பெற்றன.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஸ்ரீ காசிமடம் ஜூனியர் சுவாமிகள் அவர்கள் சந்தான குரவர்களின் பெருமைகளையும் அவர்கள் திருநாமத்தால் நிலையங்கள் ஏற்படுத்துவதின் கருத்தினையும், தமிழுக்கும் சைவத்துக்குமாகத் தருமையும் துறைசையும் தோன்றிய நாள்தொட்டு இதுவரையில் மகா சந்நிதானங்களும் முனிபுங்கவர்களும் பல்வேறு துறைகளில் செய்துள்ள பணிகளையும் எடுத்து நன்கு விளக்கியதோடு இம சேது பர்யந்தம் சிவமணங் கமழச்செய்து சைவ ஸ்தாபனஞ்செய்த ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் வழி வழி வரும் குமர குருபரர்களெல்லாம் எப்பணியைச் செய்தாலும் அதனால் அடையும் பெருமை அவர்களைச் சாராது; அப்பெருமையெல்லாம் அவர்களின் குருபீடத்திற்கே உரியது என்பதையும் குறிப்பிட்டார்கள். பிறகு வித்வான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றிகூறக் கூட்டம் முடிந்தது. மேளவாத்தியத்துடன் சிவநாம முழக்கத்துடன் யாவரும் உடன்வர, துறைசை மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ அருணந்தி—ஸ்ரீ மறைஞானசம்பந்தர் நிலையங்களுக்கு எழுந்தருளி அந்த இரண்டினையும் திறந்துவைத்தருளினார்கள். படம் எடுக்கப்பெற்றது.

## குருபூஜை விழா.

தருமபுர ஆதீனத்தின் 24-வது குரு மகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் 7-வது ஆண்டு குருபூஜை விழா 1-6-52 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. குருமூர்த்தத்தின்முன்பு பந்தலலங்காரம்; முதனாளும் அன்றும் குருமூர்த்த சந்நிதியில் தேவார பாராயணம் நிகழ்ந்தது. காலை விசேஷ அபிஷேக

ஆராதனை, அதற்குமேல் காலை மாலை ஆதீன அடியார்கள் சமயப் பிரசங்கம் செய்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துப் பௌதிகப் பேராசிரியர் பிர்மஸ்ரீ R. K விசுவநாதையர் அவர்கள் தம்மால் எழுதப்பெற்ற—விழா மலராகிய **'அணுவில் தாண்டவம்'** என்ற ஆதீன வெளியீட்டைப் பற்றி வெளியீட்டுரை பேசினார்கள். இரவு 7 மணி முதல் ஏழிசை வல்லபி திருமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்களின் இன்னிசை விருந்து அனைவர்க்கும் தெவிட்டாத முறையில் வழங்கப்பெற்றது. காலையிலும் மாலையிலும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளியாகி அனைவர்க்கும் அருட்பிரசாதம் வழங்கினார்கள். இரவு வழிபாட்டிற்குப்பிறகு விழா மலரும் வழங்கப்பெற்றது,

## திருநெறிய தெய்வத்தமிழ் மகாநாடு

தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் கோயில் உற்சவத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் நடை பெற்று வருகின்ற திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு இவ்வாண்டும் 4—6—52 முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. முதல் இருநாட்களும் திருமுறை நாட்கள், அடுத்து புராணம், இதிகாசம், இலக்கணம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கீழ்க்கணக்கு, காப்பியம், சாத்திரம் முதலியன குறிக்கப்பெற்றுள்ளன.

முதல்நாள் 4—6—52 மாலை 5 மணிக்கு ஆதீன மடாலய முகப்பில் மாநாடு தொடக்கம். ஆதீனப் பாடசாலை ஆசிரியர்கள் திருமுறைகள் ஓதினர். பெருமக்கள் கூட்டம், தலைவர் திறப்பாளர் முதலியோர் தத்தமக்குரிய ஆசனத்தில் அமர்ந்தார்கள். முதலில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசியருளினார்கள். அடுத்த நிகழ்ச்சி வரவேற்பு அளித்தல். ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளுக்கு ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்கள், ஆதீனக்கல்லூரித் தமிழ்ப்பகுதி, வடமொழிப்பகுதி, ஆதீனத் தேவாரப்பாடசாலை, ஆதீன ஆகமபாடசாலை, ஆதீன ஹயர் எலிமெண்டரி ஸ்கூல், ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகம், ஆதீனப்பிரசார கோஷ்டி, ஆதீனப் பதிப்பகம் இவைகளின் சார்பில் தனித்தனியே வரவேற்பிதழ்கள் வாசித்து அளிக்கப்பெற்றன. பிறகு திறப்பாளர் மதுரை ஸர். பி, டி. ராஜன் (பார் - அட் - லா M. L. A.) அவர்களுக்கும், தலைவர் சென்னை உயர்நீதி மன்றத்து உயர்தர நீதிபதி பிர்மஸ்ரீ T. L. வேங்கடராமையர்

அவர்களுக்கும் ஆதீனத் திருக்கூட்டத்தின் சார்பில் வரவேற்பு மலர் படிக்கப்பெற்றது.

வரவேற்பு மலர்களை அன்போடு ஏற்றுக்கொண்ட ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் திருநெறிய தெய்வத் தமிழ் என்ற சொற்றொடரில் காணப்படும் சிறப்புக்களையும், மாநாட்டின் நோக்கத்தினையும் மனிதர் பிறப்பு இறப்புக்களின் நீங்கி உய்தி பெறும் வழியினையும் விளக்கி மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள். பிறகு திறப்பாளர் திரு. பி. டி. ராஜன் அவர்கள் சுதந்திர மடைந்த மக்கள் செய்யவேண்டிய சேவைகளை விளக்கிப் பேசியதோடு ஐயப்பனின் பெருமையையும் எடுத்துச் சொல்லி மாநாட்டைத் திறந்து வைத்தார்கள். நீதிபதி பிர்மஸ்ரீ T. L. வேங்கடராமையர் அவர்கள் அன்றைய தலைமையுரையாகக் குருபக்திதான் மக்கள் நலமடைய ஏற்றவழி; ஆலயவழிபாடு மிகச் சிறந்தது; தோத்திரங்களை இசையுடன் பாடினால்தான் கேட்கும் மக்கள் மனம் நாஸ்திகத்தினின்று விடுபடும்; அதுதான் பக்தி வளர்க்கும் வழி என்றெல்லாம் அருமையான கருத்துக் கருவூலங்களை வெளிப்படுத்தினார்கள். பிறகு சொற்பொழிவுகள் தொடங்கின.

சென்னை பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் M. A., M. Litt. 'சம்பந்தர் காலத்திய தமிழ்நாடு' என்பது பற்றியும், திருநெல்வேலி இந்துக்கல்லூரித் தமிழ்விரிவுரையாளர் திரு. S. கணபதி முதலியார் அவர்கள் M. A. L. T. 'கவியானை' என்பது பற்றியும் பேசினார்கள். தலைவர் முடிவுரை கூறக் கடவுள் வாழ்த்துடன் அன்றைய நிகழ்ச்சி இனிது முடிந்தது.

5—6—52 வியாழன், அன்றும் திருமுறைநாள், திருச்சி சப் ஜட்ஜ் திரு. V. இரத்தின முதலியார் அவர்கள் B. A. B. L. தலைமை ஏற்றுச் சிறப்பித்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தத்துவப் பேராசிரியர் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் M. A. திருவாசகம் ஓர் தத்துவ நூல் என்பதை விளக்கிக் காட்டினார்கள். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் சொல்லின் செல்லர் திரு. ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் B. A, B. L. அடைக்கலம் என்னும் தலைப்பில் திருவாசகம், இராமாயணம் முதலிய நூல்களில் காணப்பெறும் சரணாகதியின் சிறப்பை எடுத்துப் பேசினார்கள். திருமந்திரம் என்பதுபற்றித் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் திரு. K. M. வேங்கடராமையா அவர்கள் விரிவுரை நிகழ்த்திய பிறகு, திருச்சி மௌன மடம் கட்டளைவிசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் பதினொராந் திருமுறையைப் பற்றியும், நாகை தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர் வித்வான் திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் பன்னிரண்டாம் திருமுறையைப்பற்றியும் பேசிமுடித்தார்கள்.

6—6—52 வெள்ளி, புராணநாள். திருவையாறு அரசர் கல்லூரித் தலைவர் திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்கள் M. A. L. T. காளிதாசன் கண்ட முருகன் என்பது பற்றியும், கோவை நிர்மலா கல்லூரி விரிவுரையாளர், வித்வான், ஸ்ரீமத் சி. குழந்தையம்மாள் அவர்கள் சேக்கிழாரும் சேயிழையாரும் என்பது பற்றியும், சீகாழி கட்டளை விசாரணை வித்வான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பரஞ்சோதி பாநலம் என்பது பற்றியும், குடந்தை திருவாவடுதுறை ஆதீன வித்வான் திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் கந்தபுராணக் கவிநயம் என்பது பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்தினார்கள். இதில்கண்ட ஒவ்வொரு பொருளைப் பற்றியும் சிறப்பான குறிப்புக்களைக் காஞ்சிபுரம் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர் சித்தாந்த சிகாமணி திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள B. A. L. T. எடுத்து விளக்கி அனைவரையும் பாராட்டினார்கள்.

7—6—52. சனி. இதிகாசநாள். திருச்சி, வித்துவான் ஸ்ரீமத் மௌன இராமலிங்கத்தம்பிரான்சுவாமிகள் அன்றைய நிகழ்ச்சியைஅறிவித்தார்கள். சென்னை ஆனந்தவிகடன் துணை ஆசிரியர் ஸ்ரீ. பி. ஸ்ரீ. ஆசார்யா அவர்கள் சீதையின் தனிமை உரையைப் பலரும்அறிய எடுத்துச்சொன்னார்கள். சுந்தர காண்டம் என்னும் தலைப்பில் சென்னை பிர்மஸ்ரீ T. S. பால சுப்பிரமணிய அய்யர் அவர்கள் M. A. L. T. பேசினார்கள். அடுத்து கண்ணனுக்கும், கர்ணனுக்கும் உள்ள தொடர்பைக் கடலூர் ஸெயிண்ட்ஜோஸப் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான் பிர்மஸ்ரீ தே. ஆ. ஸ்ரீநிவாசாசாரியார் அவர்கள் எடுத்துமொழிந்தார்கள். இவைகள் முடிந்தபிறகு தருமபுர ஆதீனப் பாடசாலை ஆசிரியர் சங்கீதபூஷணம், தேவார இசை மணி, பண்ணிசைமணி திரு. P. சுவாமிநாதன் & பார்ட்டியாரின் இன்னிசைத் தமிழ்விருந்து சுமார் 2-மணிநேரம் வழங்கப்பெற்றது,

8—6—52 ஞாயிறு. இலக்கணநாள், சென்னை அட்வகேட் பிர்மஸ்ரீ K. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் M. L. C. தலைமையேற்றுச் சிறப்பித்தார்கள். காஞ்சிபுரம் வித்துவான் திரு. அருணைவடிவேலுமுதலியார் அவர்கள் 'தொல்காப்பியமும் பின்னூலும்' என்பதுபற்றியும், தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் 'இலக்கியத்தில் இலக்கணம்' என்பதுபற்றியும் விரிவுரையாற்றினார்கள். 8 மணிக்குமேல் சுமார் 3-மணிநேரம் திருச்சி அகிலஇந்திய வானொலிநிலையம் திரு. K. C. தியாகராஜன் &பார்ட்டியார் 'நந்தனார்நாடகத்தை மிகத்திறம்பட நடித்திக்காட்டினார்கள். கண்டுகளித்த மகா சந்நிதானம் அவர்கள் நாடகஉறுப்பினர்கள் அனைவர்க்கும் உயர்தர ஆடைகள் வழங்கி ஆசீர்வதித்தார்கள். (தொடரும்)

## சித்தாந்த சாஸ்திர பாடவகுப்பு.

சாஸ்திரங்கள் ஏனைய நூல்களைப்போல தாமே படித்துக் கொள்ளும் திறத்தனவல்ல. முதலில் சாஸ்திர நூலைக் கையினால்தொடுதற்குக்கூட தீக்ஷை பெற்றிருத்தல் வேண்டும் என்பது மரபு. அதுமட்டும் போதாது, கேட்பவர்களும் புலமை பெற்றிருத்தல் வேண்டும். சொல்லுபவர்களும் நல்ல அனுபூதிமான்களிடத்தில் முறையே பயின்று தெளிந்திருந்தாலொழிய அவர்களுக்கு விளக்கமாகச்சொல்லும் ஆற்றல் இரா, இத்தகைய அருமையான சாஸ்திரஞானத்தை அறிஞர்களுக்கு அளிக்கவேண்டும் என்ற பெருங் கருணையோடு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் இவ்யாண்டு குருபூஜைத் திருநாளைச் சார 12நாட்களும் சாஸ்திர பாடவகுப்பு நடத்தத்திருவுள்ளங் கொண்டார்கள். அவ்வண்ணம் ஆதீனப் பிரசாரகோஷ்டித் தலைவரும், சாஸ்திரங்களை நன்கு கற்றுத் தெரிந்தவர்களும் ஆகிய ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகளுக்கு ஏற்பாடு செய்ய ஆணையும் தந்தார்கள். குறிப்பிட்ட அறிஞர்களுக்கு நிகழ்ச்சி அறிவிக்கப்பட்டது. அவ்வவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வந்துசேர்ந்தன. வகுப்புத் திட்டத்தில் மாணவர்கள் எண்ணிக்கை 25 ஆதலின் விண்ணப்பங்கள் அனைத்தையும் பரிசிலனை செய்து தகுதியுடையார்களுக்கு மட்டும் உத்திரவு அனுப்பப்பட்டது. காஞ்சிபுரம் சித்தாந்த சிகாமணி திரு. க. வச்சிரவேலு முதலியார் B. A. L. T. அவர்களும், ஆரணி சித்தாந்த ரத்னாகரம் மதுரகவி திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும் வகுப்புக்கு

ஆசிரியர்களாக நியமனம் செய்யப் பெற்றுர்கள். இவர்கள் இருவர்களும் தருமபுர ஆதீனப்புலவர்களே.

1—6—52 ஞாயிறன்று வகுப்புத் தொடக்கம். அன்று தருமையாதீன 24 வது குருமகாசந்நிதானம் அவர்கள் 7 வது ஆண்டு குருபூஜைத் திருநாளாதலின், குருமூர்த்தத்தின் முன்னிலையில் வகுப்பு தொடங்க ஏற்பாடாயிற்று. முதலில் கடவுள் வணக்கம். ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வகுப்பின் நோக்கத்தை எடுத்து மொழிந்தார்கள். திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், B. A. L. T. அவர்கள் சாத்திரங்களின் அடிப்படைத் தத்துவத்தை எடுத்துரைக்கும் வாயிலாகத் தொடக்கவுரை மொழிந்து வகுப்பைத் தொடங்கி வைத்தார்கள். அவர்களை அடுத்து, திரு. க. வச்சிர வேலு முதலியாரவர்கள் பாடஞ்சொல்லத் தொடங்கினுர்கள். முதற் சூத்திரத்தில்காணும் கருத்துக்களில் ஒருசிலவே அன்று எடுத்துரைக்க முடிந்தது. மறுநாள் முதல் நாடோறும் மேற் குறித்த இரண்டு ஆசிரியர்களைக் கொண்டு காலை 9 மணி முதல் 12 மணிவரையிலும், மாலை 3 மணிமுதல் 5 மணிவரையிலும் முறையே சிவஞானசித்தியார் பாடமாக நடத்தப் பெற்று வருகிறது. மாணவர்கள் எண்ணிக்கை 15. அதில் பெண்பாலாரும் ஒருவர்.

## ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள்
## தருமபுரத்திற்கு விஜயம்

"ஒரு மடாதிபதி மற்றொரு மடாதிபதியோடு சந்தித்து அளவளாவி மகிழ்கின்றுர்கள்: அதனை அறிந்து உலகம் பாராட்டுகிறது என்றுல், அப்பெருமை முழுவதும் தருமபுர ஆதீன மகாசந்நிதானம் அவர்களுக்கே உரியது" என்று மதுரை ஆதீன மகாசந்நிதானம் அவர்கள் 23—3—52ல் தருமைக்கு எழுந்தருளியானபோது தமது ஆசியுரையில் குறித்தது நேயர்கள் நினைவிலிருக்கும், அத்தகைய பாராட்டுக்கு உரிய செயல் அடிக்கடி தருமபுர ஆதீனத்தில் நிகழ்ந்து வருகிறது என்பதை அன்பர்கள் அவ்வப்போது அறிந்து மகிழ்கிருர்கள். அம்முறையில் இருபீடாதிபதிகள் 4-6-52 அன்று தருமையில் ஒருசேர எழுந்தருளியிருக்க, அனேக மக்கள் தரிசித்து உய்ந்தார்கள் என்றுல் அதுவும் ஒரு குறிப்பிடத் தக்க தொன்றல்லவா?

 359.

இரண்டு நாட்களாகவே அன்பர்கள் அடிக்கடி தரும புரத்திற்கு வந்து 'என்ன ஆசாரிய சுவாமிகள் இங்கு வரப் போகிருளாமே; காலம் எப்படி மாறிவிட்டது; என்ன அதிர்ஷ்டம் பாருங்கள்' என்று தாமாகவே சொல்லி மகிழ் வார்கள். 3—6—52• செவ்வாய்க்கிழமை இரவு அவர்கள் வரப்போகிருர்கள் என்று நிச்சயமானவுடனேயே அன்பர் களுக்கு அளவுகடந்த சந்தோஷம். ஆதீன மடாலயத்தின் தென்மேற்கிலுள்ள சண்முகம் ஆர்ச்சிலிருந்து ஸ்ரீ தரும புரீஸ்வரர் கோயில்வரை அன்று மாலையில் நீர் தெளிக்கப்பட் டது. வழியின் இருபுறங்களிலும் குடை கொடி ஆலவட்டம் முதலிய எல்லா எடுபிடிகளும் நின்றுகொண்டிருந்தன. தெரு வீடுகளிலுள்ள மகளிர்களும் தத்தம் வீட்டு வாசலில் கோல மிடுதலாலும், விளக்கிடுதலாலும் மகிழ்ச்சியை வெளிக் காட்டினர்கள். மணி 6 இருக்கும் ஆர்ச்சில் கூட்டம். ஒரு புறம் ஆதீனத்தேவாரப்பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் தேவார பாராயணம் செய்யத் தயாராக நின்றுகொண்டிருந் தார்கள். எதிர்ப்புறத்தில் அப்படியே ஆதீன வேதசிவாகம பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும், மேளவாத்தியக் காரர்களும் அப்படியே தயாராகநிற்கிருர்கள். 6½ஆயிற்று 7-ம் ஆயிற்று; மணி ஆக ஆகக் கூட்டமும் பெருகுகிறது. இருவர் 'ஆசாரிய சுவாமிகள் நடந்தே வருகிருராமே; அதனுல் தான் தாமதம்' என்று பேசிக்கொள்வார்கள். அதற்குள் ஒருவர் அதோ பாருங்கள் வெளிச்சம்: வந்துவிட்டார்கள் என்பார் அப்படிப் பார்த்தபோது பல கார்வெளிச்சங்கள் அன்பர் களுக்குள்ள மனஅமைதியைக் கெடுத்துவிட்டன. மணி 7½ உள்ளபடியே வெளிச்சம் கண்ணுக்குத் தென்பட்டது. ஸ்ரீமத் ஆசாரிய சுவாமிகள் ஆர்ச்சுக்கு அருகே வந்துவிட்டார்கள்.

மேளவாத்தியங்கள் ஒலித்தன. பூர்ணகும்பம் கொடுத்து வரவேற்கப்பெற்றது. புகைப்படம் எடுக்கப்பெற்றது. வேத பாராயணம் தொடங்கிவருகிறது. தேவார பாராயணமும் ஆரம்பமாயிற்று, சுவாமிகள் மிக மெதுவாக வருகிருர்கள். அவர்கள் திருக்கண்நோக்கம் "தேவாரத்தில் எவ்வளவு ஈடு பாடு பாருங்கள் சுவாமிகளுக்கு" என்று ஒவ்வொருவரையும் எண்ணச்செய்தது. மாணவர்கள் மிக மெதுவாகத் தேவார பாராயணம் செய்து வந்தார்கள். சிற்சில வீடுகளில் பூர்ணகும் பம் வைக்கப்பெற்றிருந்தது. அங்கங்கும் சுவாமிகள் நின்று நின்று அருள் வழங்கிக்கொண்டே வந்தார்கள். மணியும் 8½. வீதிவலமாக தருமபுரீசுவரர் கோயிலுக்கு அருகில் வந்ததும்

360

மகாசந்நிதானம் அவர்களும் சந்நிதிக்கு வந்துவிட்டார்கள். முதலில் விநாயகர் வழிபாடு. பிறகு இருவர்களும் கோயிலுள் சென்று முறைப்படி வழிபாடாற்றினார்கள். சண்முகப்பெருமான் சந்நிதியில் ஸ்ரீமத் சுவாமிகளுக்குப் பட்டுகட்டி, மாலை சூட்டிப் பிரசாதம் வழங்கப்பெற்றது. ஸ்ரீமத் சுவாமிகளும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் எழுந்தருளியிருந்து தனித்த முறையில் வெகு நேரம் அளவளாவிக் கொண்டிருந்தார்கள். பிறகு இருவர்களும் கோபுரவாயிலருகே வந்ததும் அக்காட்சி படம் பிடிக்கப்பட்டது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீமத் ஆசாரிய சுவாமிகளுக்கு பொன்னாடை போர்த்தி உபசரித்தார்கள்.

4—6—52 மாலை ஸ்ரீமத் சுவாமிகள் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில் அருளிய தொடக்கவுரை அனைவர்க்கும் தெய்வ உணர்ச்சியை உண்டாக்கிவிட்டது. அன்று ஏகாதசியாதலின் சுவாமிகளுக்கு உபவாசம், ஸ்ரீ சந்திர மௌளீஸ்வரர்க்கு விசேஷ பூஜை; கோபூஜை; எல்லாம் நடத்தினார்கள். மறுநாள் பிரதோஷ பூஜை. பூஜை முடிந்ததும் பாரணை. எல்லாம் சிறப்பாகவே நடைபெற்றது. காலை 11 மணிக்கு ஆதீனப் பாடசாலை, ஆதீனக் கல்லூரி ஆசிரியர்களும், பாடசாலை மாணவர்களும் சுவாமிகளைத் தரிசனம் செய்தார்கள், சுவாமிகள் அவர்களுக்கெல்லாம் புதிய ஆடைகள் வழங்கி, கொஞ்சநேரம் அவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார்கள். மாலை மூன்று மணிக்கெல்லாம் ஆதீன நூல் நிலையம். பதிப்பகம், மடாலயம் ஆகிய எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகத் திருக்கண் நோக்கினார்கள். இரவு 6 மணிக்கு ஸ்ரீ தருமபுரீஸ்வரர் வழிபாடு முடித்து அருகாமையிலுள்ள அன்னவாசல் என்ற கிராமத்திற்கு எழுந்தருளியானார்கள்.

ஸ்ரீமத் சுவாமிகள் இரண்டு நாட்களிலும் வசதியாகத் தங்குவதற்கென ஆதீன ஹயர் எலிமெண்டரி ஸ்கூலில் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. சுவாமிகள் பூஜையுடன் இதில் தங்கியிருந்தபோது தரிசனம் செய்து கொண்டவர்களுள் சிலர் 'பள்ளிக்கூடம் பர்னசாலையாக மாறிவிட்டதே' என்று வியந்தார்கள். அப்படி அங்கு வசதிகள் செய்து வைக்கப்பட்டிருந்தன. சுவாமிகள் கூடவந்த ஆடவர் பெண்டிர் அனைவருக்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உயர்ந்தமுறையில் புதிய ஆடைகள் வழங்கினார்கள்.

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(நந்தன ஹு ஆனிமீ 1உ முதல் 31உ வரையில்)

(14—6—52 முதல் 13—7—52 வரையில்)

## 1. மேஷம். அசுவதி, பரணி, கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி கிருத்திகை முதல்பாதம் சம்பந்தப்பட்ட மேஷ ராசி பலன் சுபத்தைத்தரும். காரியானுகூலங்கள், சத்துரு பராஜயம், தனவரவு, ஆரோக்கியம், சுகபோகங்கள், பந்துமித்திர சமாகமம், விரயம், வாக்கு ஸித்தி, சன்மானம், நூதன பிரபு தரிசனம், குடும்பசுகம் இவைகள் ஏற்படும். பரணி சம்பந்தப் பட்டவர்களுக்கு உத்தண்ட ஸ்வபாவம், வாக்கு தோஷத்தால் அவமானமடைதல், வாஹனத்தில் ஆபத்துண்டாதல், சமான பிரபு கோபம், எதிர்பாராத நஷ்டங்கள், சோர சத்துரு பயம், அக்னி பாதை. விஷபீதி முதலிய கஷ்ட பலன்கள் ஏற்படும். ஞாயிறு சுபவாரம்.

## 2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி, மிருகசீரிஷம் $\frac{1}{2}$.

கார்த்திகை, மிருகசீரிஷம் இரண்டு நக்ஷத்திரங்கள் சம்பந்தப்பட்ட விருஷபராசிபலன் சுபத்தை தரும். சுபசோபனாதிகள் மூலம் தனவிரயம். பந்துமித்ர ஸமாகமம், நூதன வாஹன லாபம், வஸ்திராபரணச் சேர்க்கை, மனோ உல்லாசம், வித்யா விருத்தி, உத்தியோக லாபம். தொழில் மேன்மை, வியாபார லாபம் முதலிய சுபங்களும், ரோஹிணி சம்பந்தப்பட்டவர்களுக்கு ரோகபீடை, அதிகச்செலவு, பந்து மித்திராளுடைய தொல்லை, தொழில் கவலை. மனக்கிலேசம்முதலிய சிரமபலன்கள் காட்டும். தெய்வபலமிருந்தால் சிரமம் குறையும். வெள்ளியும் திங்களும் நலன் தரும்.

## 3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை, புனர்பூசம் $\frac{3}{4}$.

மிருகசீரிஷம் திருவாதிரை சம்பந்தப்பட்ட மிதுனராசி பலன் சுபமாகும். புனர்பூசம் சம்பந்தப்பட்ட மிதுனராசிபலன்

சென்ற மாதம்போலவே துக்கத்தையும், காரிய விக்னத்தையும், கலகங்களையும், ராஜாங்கநிர்ப்பந்தத்தையும், குடும்பத் தொல்லைகளையும், கீர்த்தி பங்கத்தையும் வீண் நஷ்டங்களையுமே உண்டு பண்ணும், தசாபலன் நன்குள்ளவர்களும் தெய்வ பலமுள்ளவர்களும் கஷ்டத்திலிருந்து விடுபடுவார்கள். ஷை மாதம் 18, 21 25 தேதிகள் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼, பூசம், ஆயில்யம்.

பூசம் ஆயில்யம் சம்பந்தித்த கடகராசி பலன் சுபத்தைத் தரும். விவாஹாதி மங்கள காரியங்கள். தூரயாத்திரை, மேலோர் பெரியோர் தரிசனம், சன்மானம் கிடைத்தல், கீர்த்திபத்திரம், உத்தியோக மேன்மை, காரிய சித்தி, கடன் நிவர்த்தியாகுதல், எதிர்பாராத பொருள் வருமானம். விவசாய விருத்தி, காலி கன்று சேர்க்கை, நூதன வாஹனம் அமைதல், வஸ்திராபரணச் சேர்க்கை, சுப சமாசாரக் கேள்வி, மனோ உல்லாசம் இவைகள் ஏற்படும். புனர்பூசம் கடக பலன் சமமாகும். ரோகசாந்தியும் துக்க நிவர்த்தியும் ஏற்படும். ஒருவாறு மனம் சாந்தியடையும். சனியும் செவ்வாயும் நலன் காட்டும்.

5. சிம்மம். மகம், பூரம், உத்திரம் ¼

சிம்மராசிக்காரர்களுக்கு இம்மாதம் நடுப்பகுதியில்மாத்திரம் தொல்லைகள் அதிகமாகும், ஆனாலும் சுபமே தரும். அசாத்தியமெல்லாம் சாதித்தல், வித்யா விருத்தி, உத்தியோக லாபம், தொழில் மேன்மை, வியாபார பெருக்கம், காலி கன்று சேர்க்கை, விவாஹாதி சுபங்கள், மனோ உல்லாசம், காமபோகாதிசுகங்கள், ஸ்வாதிகாரபிரவிருத்தி, யஜமானத்துவம் முதலியவைகள் ஏற்பட்டுச் சந்தோஷத்தைத்தரும். ராகு கேதுக்களுடைய திசா புத்தி கெட்டஸ்தானத்திலிருந்து நடப்பவர்களுக்குச் சிம்மராசி பலன் ராஜபயத்தைத்தரும், ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்.

6 கன்னி. உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

ஷை மூன்று நக்ஷத்திரக்காரர்களுக்குமே கன்னியாராசி பலன் மத்தியபலந்தான். ஆனாலும் திசாபுத்திபலன் சிலாக்கியமாய் அமைந்தும் தெய்வபலம் உள்ளவர்களுக்கு ஷை மாதம்

கன்னி கோசாரம் சுபத்தைத்தரும். ஹஸ்த நக்ஷத்திரத்துக்கு மாத்திரம் விசேஷ சுபபலனும் சந்தோஷமும் உண்டாகும். மத்திய பகுதியில் எதிர்பாராதபடி முக்கியமான பிரபுக்களின் மரணத்தால் அதிர்ச்சியும் பயங்கரமும் தொழிலாளிகளின் தொல்லையும் வெறுப்பும் காட்டும். தெய்வபலமிருந்து ரக்ஷிக்கும். திங்களும் வியாழனும் சுபமாகும்.

7. **துலாம். சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.**

விசாகம் தவிர மற்ற இருநக்ஷத்திரங்களும் சம்பந்தப்பட்ட துலாராசி பலன் சுபத்தைத்தரும். கடன் நிவர்த்தி, அசாத்திய சாதனம், தொழில் மேன்மை, கீர்த்திபத்திரம் கிடைத்தல். ராஜசபா பிரவேசம், நஷ்டதன பிராப்தி, சத்துருக்கள் சரண் அடைதல், பந்துமித்திர சமாகமம், தூரத்திலிருந்து ஆஹ்வான பத்திரிகை, மேலோர் பெரியோர் நேசம், சத்துருநாசம், ரோக நாசம், அதிக வரவு முதலிய சுபங்கள் நடக்கும், புதன் வெள்ளி சுபவாரமாகும்.

8. **விருச்சிகம். விசாகம், ¼ அனுஷம், கேட்டை.**

இம் மூன்று நக்ஷத்திரக்காரர்களுக்குமே ரோகபீடையும் வைத்திய செலவுகள் அதிகமாயும் தொழிலாளி தொல்லையும் கிருஷிகாரியவிக்னமும் சிப்பந்திகளால் பயமுண்டுபண்ணுதலும் காலி கன்று குறைவும் வாஹன குறைவும் நம்பினவன் மோசம் செய்தலும் அபஜயமும் துக்கசித்தமுமே ஏற்படும். ஞாயிறு திங்கள் சுபமாகும்,

9. **தனுசு. மூலம், பூராடம், உத்திராடம் ¼.**

இம்மாதம் தனுர்ராசி பலன் எல்லோருக்குமே நன்மை தரும். ஆனல் அலைச்சல், சுகபங்கம், நூதன பிரபு தரிசனம், மேன்மை, தனலாபம், வியாபார விருத்தி, ஸ்தாவர ஜங்கம சொத்துக்களின் கிரயவிக்ரயம், இல்லறசுகம், வெகுகாலம் எதிர்பார்த்திருந்த காரியஸாதனம், வியவஹாரஜயம். உத்யோக லாபம், தொழிலாளிக்குக் கும்மாளம், நடுத்தர வகுப்பாருக்கு அதிகச் செலவுகள், சத்பிராமணர்களுக்குத் தபோவிருத்தி யாகுதல், தெய்வசக்தி பிரகாசித்தல், சுபசந்தோஷங்கள் உண்டாகுதலும் ஏற்படும். சனியும் புதனும் சுபவாரமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½.

மகரராசி பூராவுமே மூன்று நக்ஷத்திரக்காரர்களுக்கும் சுபமாசமாகும். வித்யாவிருத்தி, ஜீவனலாபம், இடமாற்றலுடன் உத்தியோக மேன்மை, மேலோர் பெரியோர் நேசம், வியாதி சாந்தியாகுதல், இல்லறசுகபோகங்கள், தூரப்பிரயாணம் மனோ உல்லாசம், ராஜாங்க உதவி, சன்மானம் கிடைத்தல், அலைச்சலுடன் விசேஷ காரியசாதனம், குருமித்ர தரிசனம் முதலிய சுபங்களும் மாதக்கடைசியில் சில நஷ்டமும் ஏற்படும்.

11. கும்பம். அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

கும்பராசி பலன், முற்பாதியில் சுபமும், பிற்பாதியில் அசௌகர்யமும் ஏற்படும். சுபங்கள் தவக்கப்படும். நல்லோர்களெல்லாம் விரோதமடைவார்கள், துஷ்டர்கள் சேர்க்கையால் நஷ்டமும் அவமானமும் ஏற்படும். பிரபுக்களாகில் பல சிக்கல்களில் மாட்டிக்கொண்டு தவிப்பார்கள். எங்கும் விரோதமும் அபஜயமும் நஷ்டமும் உண்டாகும், சோரபீடையும் விஷ ஜந்துக்கள் பீடையும் ஏற்படும். சந்யாசிகளால் துன்பமுண்டாகும். சதயத்துக்கு மாத்திரம் மிச்ரபலனாக நடக்கும். புதன் வியாழன் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி

உத்திரட்டாதி ரேவதிக்காரர்களும் சுப தசா சம்பந்தப்பட்டவர்களும் இம்மாதம் விசேஷ சௌக்கியமடைவார்கள். அசாத்தியசாதனம், வியாபாரப் பெருக்கம், சங்மித்திராளுடைய சேர்க்கை, தனதான்யலாபம், கீர்த்திபத்திரம் கிடைத்தல், நஷ்டதன பிராப்தி, தெய்வபக்தி, சத்கர்மானுஷ்டான பலன், பிரதிஷ்டாபலன், கிரஹாராதனம், கட்டடவேலைகள், தோட்டம் கிணறு அமைத்தல், வியவசாய விருத்தி, சுபசோபனாதிகள் முதலிய சுபங்களே ஏற்படும், நீண்டநாளைய சத்துரு நாசம் ஆகி மிகுந்த சந்தோஷத்தைத் தரும்.

சுபம்.

## 13. தேவி சுரதவைசியர்களுக்கு வரங்கொடுத்த அத்தியாயம்.

பின்னு முனிவ னுரைசெய்வான் பீடார் நினையு நின்பினுறு
மன்னுேன்றனையுமன்னியராம் விவேகமடைந்தவனைவரையும்
மன்ன மோகம் புரிபவடான் மாலின் மாயா தேவியதைப்
பின்னஞ் செய்வா ளும்மவளே பேணியவளைச் சரணடைவீர்.

கு - ரை:- பீடார் நினையும்—பெருமை பொருந்திய அரசனாகிய நின்னையும்; அரசனுக்குப் பின்வந்தோர் வணிகராதலின், வணிகன், 'நின் பின் உறும் அன்னுேன்' எனப்பட்டான். நினக்குப் பின்னுலிருக்கின்ற அவ்வணிகன் என்னலுமாம். அன்னியர்ஆம் - மற்றுள்ளவராகிய; விவேகம் - தத்துவஞானம், மன்ன - மிகுதியாக; மோகம்புரிபவள்; மயக்கத்தை உண்டாக்குகின்றவள். மோகம் - மித்தைஞானம். அதை - அம்மோகத்தை பின்னம் - கெடுத்தல்.

வி - ரை:- தேவி, தத்துவஞானிகளாயினும் தன்னை வழிபடாதவருக்கு மோகத்தையும், வழிபட்டோர்க்கு அம்மோகத்தைக் கெடுத்தலையும் செய்கின்ருள். "வந்து வந்தித்து அருளாயிருக்கு மவர்க்கொளியா யணுகாதவர்க்கு இருளாயிருக்கு நலங்கிளர் மேனி யிலங்கிழையே" என்னும் சரசுவதியந்தாதிச் செய்யுளடிகள் ஈண்டு நினைவுகூரத்தக்கன. [1]

அனைய பரமே சுவரிபத மன்பிற் பணிவார்க் கபவருக்க
நினையுஞ் சுவர்க்க போகமுத லான வளிப்ப ளெனநிமல
முனிவ னுரைப்பக் கேட்டரசன் பின்னுேனுேடுமுடிதாழ்த்துப்
புனிதவிரதன் பதம்வணங்கிப் போனுர்தவத்தைப்புரிந்திடவே,

கு - ரை:- போகம் - இம்மை இன்பம்; சுவர்க்கம் - மறுமை இன்பம்; அபவருக்கம் - முத்தியின்பம். "போகசொர்க்காபவர்க்க:" என்பது வடநூல். [2]

சித்த மிசைத்தன் புரிபெறுமா றுன்னுஞ் சுரத வைசியனு
நத்தார் புனித நதிப்புளின நண்ணி யெனையா டேவியுரு
மெத்து மிருத்தி கையிற்புரிந்து தேவி சூக்க மிகச்செபித்துப்
பத்தியுடனம் மையைநினைந்து தன்னவுணவிற் பயின்றனரால்.

கு - ரை:- தன்புரி - தன்னுடைய இராச்சியத்தை, பெறும் ஆறு - மீட்டும் பெறுவதற்கு; நத்து ஆர் புனிதநதிப் புளினம் - சங்குகள் நிறைந்த தூய்மையான ஒரு ஆற்றின் மணல் மேட்டை, தேவியுரு - தேவியினுடைய திருவுருவத்தை; மெத்து மிருத்திகையில் - மிருதுவான மண்ணில்; தேவிசூக்கம் மிகச் செபித்து - ஆசாரியனால் உபதேசிக்கப்பட்ட தேவி சூக்தமந்திரத்தைச் செபித்துக்கொண்டு; செபித்தல் - சொல்லுதல்; 'சரித மொருவன்றுகளின்றிச் செபித்தல்' (12-ம் அத்தியாயம், 8-ம் செய்யுள்) தன்னவுணவிற் பயின்றனர் - முதலில் அற்பமான ஆகாரத்தை உண்டு பழகினவர்களாய்.

வி - ரை:- தேவிசூக்தமாவது, ஐந்தாம் அத்தியாயத்தி லுள்ள ஐந்துமுதல் இருபது வரையிலுமுள்ள தோத்திரச் செய்யுட்கள். தேவிசூக்தம் இருக்குவேதப்பிரசித்தம். "நமோ தேவியை" இதுமுதலான ஐந்தாம் அத்தியாயத்திற்கூறிய ஸ்துதி ரூபம் என்பது நாகோஜிபட்டீயம். தேவிசூக்தம் தேவியைத் தெய்வமாகக்கொண்டுள்ளது. அது வைதிகம் தாந்திரிகம் என இரண்டுவகைப்படும். நதி என்றது சகியபருவதத்திலுள்ள நதிகளில் ஒன்று என்பர். [3]

பின்ன ருணவு சிறிதுமின்றிப் புறத்தின் மனமும் பெயராம
லன்னை பூசை மலர்தூபங் கந்த மோம மாதிகளான்
மன்ன வியற்றித் தந்தேக மலியு மிரத்தப் பலியீந்து
மன்ன னெடுபின் னவன்றானும் வணங்கியம்மை தனைத்
துதித்தார்

கு - ரை: புறத்தில் மனமும் பெயராமல் என்றமையின் புறவிவகாரங்களை விட்டவர்களாய் தேவியின்பால் மனமுடைய வர்களாய் இருந்தார்கள் என்க. ஓமம் ஆதிகளான் என்றமையின் தீபம், அர்க்கியம் தர்ப்பணம் முதலியவைகளையுங்கொள்க. மன்ன - விதிமுறை பொருந்த, தேகம் மலியும் - உடம்பில் மிகுதியாயுள்ள, இரத்தம்பலி - இரத்தம்கலந்த பலி, பின்னவன் - வணிகன்.

வி - ரை:- அரச வைசியர்கள் பிறவுயிர்களுக்கு ஊறு செய்யும் இயல்பினரல்லராகையினாலே தம் சரீரத்தினின்றும் எடுத்த இரத்தம் கலந்த அன்னத்தைப் பலியாகக்கொடுத்தனர் என்க. [4]

இனையவாறு மனமொன்று யெழிலார் தவத்தை மூன்றுசமை
யனைய ரியற்றி யமர்நாளி லம்மை கருணை கூர்ந்தருளித்
துனையி லெய்தி மனவேட்கை சொல்வீ ரீண்டே யளிப்பலென
மனவன் வணங்கி யெனதுபுரி மாறு தெனக்குக் கணப்
பொழுதில்.

கு - ரை:- சமை - வருடம், அனையர் - அந்த அரசவைசியர், மனவேட்கை - மனதில் விரும்பியவைகளை, சொல்வீர் - என்னிடம் சொல்லுங்கள்; கேளுங்கள், ஈண்டே - விரைவாக; இப்பொழுதே, "ஈண்டென்ப திவ்விடத்தோடிப் படிச்சடுதியும் பேர்" சூடாமணி, அளிப்பல் - கொடுப்பேன், மன்னவன் என்பதிலுள்ள னகரமெய் எதுகைநோக்கித் தொகுத்தல்விகாரமுற்றது. புரி - பட்டணம்; இராச்சியம். மாறு து - என்னை விட்டு மாறுமல், இது அடுத்தகவியில் முடிவுறுகின்றது. [5]

கிடைக்குமாறு மறுபிறப்பிற் கிடைக்குமாறு மருளென்னத்
தொடிக்கைக் கருணை யுருத்தேவி சுரத வரசற் கவ்வரத்தை
நொடிப்பி லடைவா யெனநொடிப்ப நோற்கும் வைசி யப்புனிதன்
படிக்கண்வீழ்ந்துதேவிதனைப் பழிச்சிவரத்தைப் பகர்கின்றுன்.

கு - ரை:- சுரதவேந்தன் இப்பிறவியிலும் மறுபிறவியிலும் தனது ராச்சியம் தனக்கே கிடைக்கவேண்டுமென்று வரம் வேண்டினன். தொடி கை - வளையல்களணிந்தகைகள், கருணையுருத்தேவி - அருள்வடிவுடையதேவி, 'அருளுண்டாமீசற்கது சத்தியன்றே' சிவஞானபோதம். நொடிப்பு - கைநொடித்தற்குரியபொழுது, விரைவு என்றபடியாம். நொடிப்ப - சொல்ல, பழிச்சி - துதித்து, பகர்கின்றுன் - கேட்கின்றுன்.

வி - ரை:- முதலடியின் முதலில்வந்துள்ள கிடைக்குமாறு என்னும் தொடர் பொருள்வேறுபடாமல் மீண்டும் வந்ததும் மூன்ருவது அடியின் முதலிலுள்ள நொடிப்பில் என்னும் ஓர் பொருள்வேறுபட்டு நொடிப்ப என மீண்டும் வந்துள்ளதும் மடக்கு என்னும் சொல்லணியின்பாற்படும். அரசன் தன் குலதருமத்தைக் குறைவுதீரச் செய்தலில் விருப்பமுடையவன். ஆதலினுல்தான் பகைவரை வென்று இராச்சியம் ஆளுதலாகிய தருமத்தை முற்றச்செய்யும் விருப்பமுடையவனுய் இப்பிறவி

யிலும் அடுத்தபிறவியிலும் தனது ராச்சியம் தனக்கே கிடைக்கும்படி வரம் வேண்டினுன் என்க. [6]

எனக்குத் துன்பமளியகத்தோ டெய்துமமதை யெஞ்ஞான்று
மனக்கண் வாரா தருள்புரிவாய் மாயா தேவி மாறேவி
சினக்குங் காலற் காய்கால தேவன் றேவி சிவஞானம்
அனுக்க மகல விக்கணமே யளிப்பாயென்னப் போற்றினனுல்.

கு - ரை:- அளி - கொடுக்கின்ற, அகம் - தானல்லாத வுடம்பை யானென்றுகருதுவது. அகங்காரம் அகப்பற்று என்பன இதன் வேறு பெயர்கள். மமதை - தன்னேடியைபில்லாத பொருளே எனது என்று கருதுவது. மமகாரம் புறப்பற்று என்பன இதன் வேறுபெயர்கள். மனக்கண் - என்னுடைய மனதில், மால் தேவி - திருமாலின் சக்தியாயிருப்பவளே, சினக்கும் - மார்க்கண்டேயனேக் கோபித்த, காலன்காய் - இயமனேக்கோபித்துக்கொன்ற. காலதேவன் - காலதத்துவத்தை நடத்தும் கடவுளாகிய சிவபெருமானது. தேவி - சக்தியாயிருப்பவளே. அனுக்கம் - பிறவித்துன்பம், சிவஞானம் - வீட்டிற்கு நிமித்தகாரணமாகிய சிவமென்னும் செம்பொருளேக்காண்பது. "சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு" திருக்குறள்,

வி - ரை:- காலற்காய்காலதேவன் என்பதற்குக் காலனுக்கும் காலனுயுள்ள கடவுள் எனப் பொருளுரைத்தலுமாம். அகப்பற்றும் புறப்பற்றுமாகிய அகங்காரமமகாரங்களேபிறவித் துன்பமுதலிய துன்பங்களுக்கெல்லாம் காரணமாதலினுலும் அவையொழியப்பெற்று மெய்யுணர்வாகிய சிவஞானம் வாய்க்கப் பெற்றவரே பிறவித்துன்பத்திலிருந்து நீங்கிப் பேரின்பமாகிய முத்திவீடெய்தல் கூடுமாதலினுலும்" எனக்குத்துன்ப மளியகத் தோடெய்து மமதை யெஞ்ஞான்று மனக்கண் வாராதருள் புரிவாய் எனவும் "சிவஞானம் அனுக்கமகலவிக்கணமேயளிப்பாய்" எனவும் வணிகன் தேவிபால் வரம்வேண்டினுன் என்க. 'பற்றிவிடாஅ விடும்பைகள் பற்றினேப் பற்றி விடாஅதவர்க்கு' (347) 'யானெனதென்னுஞ் செருக்கறுப்பான் வானேர்க்குயர்ந்த வுலகம் புகும்' (346) 'ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர் வில்லா தவர்க்கு (354) 'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலேப்படுவர் மற்றீண்டு வாரா நெறி (356) என்னும் குறட்பாக்கள் ஈண்டு நினேவுகூர்ந்தறிதற்குரியன. வணிகன்

மிகவும் பற்றுடையவனும் மனைவி மக்களுடன் செல்வமும் பெற்று இல்லறத்தில் வாழ்ந்து அதனால் மிகவும் துன்புற்று வெறுப்படைந்தவனாதலின் பரலோக விச்சையுடையவனாய்ச் சிவஞானம் வேண்டினான் என்க. (7)

களியாற் போற்றும் வைசியனைக் கருணைத் தேவி கண்ணுற்றே, யளியா லுரைப்ப னின்விருப்ப மாற்ற வியக்கத் தக்கதுவாம், ஒளியார் ஞான மெனதுசர ணுற்ற பத்தி யெஞ் ஞான்றும், விளியா தளித்தா மந்தத்தின் மேலாம் வீடும் வழங்குதுமால்.

கு - ரை:- கருணைத்தேவி; "அருளது சத்தியாகும் அரன் றனக்கு" சிவஞான சித்தியார். அளி—கருணை, விருப்பம்—சிவஞான வேட்கை, விளியாது—அழியாமலிருக்கும்படி, அளித்தாம்—கொடுத்தேன், அந்தம்—தேகத்தின்முடிவு, "தேகாந்தம் கதியையடை வரடைவரென' 13 அத் 15 செ.

வி - ரை:- அளித்தாம் வழங்குதும் என்ற தன்மைப் பன்மைகள் ஒருமை குறித்தன. வீடெய்துதற்கு ஏதுக்களாயுள்ள ஞானமும் பக்தியுமாகியவிரண்டினையும் இப்பொழுதே தந்தேன் என்றும் அவற்றின் பயனாகப் பெறுவதற்குரிய வீட்டினைத் தேகமுடிவில் தருவேன் என்றும் தேவி கூறினாள். (8)

என்று கூறிச் சுரதனெனு மெழிலார் மகிபன் றனைப் பின்னும், மன்ற லோதி பார்த்துரைப்பண் மன்ன வரிக டமை வென்றே, யின்றே யெல்லாப் புவியினுக்கு மேக வரசாய் மன்னுதியாற், பின்றோய் பிறப்பிற் பரிதிமனை பிறங்கு சாவர் ணையின கட்டில்.

கு - ரை:- மன்றல்ஓதி—மணம்பொருந்தியகூந்தலையுடைய தேவி, மன்ன—அரசனே, அரிகள்தமை—பகைவர்களை, ஏக அரசு—ஒரே சக்கரவர்த்தி; சார்வபௌமன், மன்னுதி—வாழ்வாய், பின்தோய்—பின்பு வருகின்ற; அடுத்த, பரிதிமனை—சூரியன் மனைவி, பிறங்கு—விளங்குகின்ற. சாவர்ணையின் அகடு—சாவர்ணதேவி என்பவளின் வயிறு. இது அடுத்த செய்யுளில் முடிகிறது. (9)

பிரிய மருளுஞ் சாவர்ணி யென்னு மனுவாய்ப் பிறந்திந்த
விரியு முலகை யாளென்ன விளம்பக் கேட்டே யவ்விருவ
ரரிய துதிகண் மொழிந்தாடிக் களித்தா ரனையர் கண்டிடவே
பெரிய தேவி மறைந்தனளாற் பேணு மடியர் வாழ்த்திடவே.

கு - ரை:- சாவர்ணி—சாவர்ணியின் புதல்வன்; சாவர்ணிக மனு, இவன் பதினான்கு மனுக்களில் ஒருவன், அனையர்—சுரதவைசியர். [10]

தேவி யருளாற் சுரதமனன் றெவ்வர் தமைவென் றேநகரம்
மேவி யாண்டான் சின்னாளின் மேலாம் வைசி யப்புனிதன்
ஓவ லிலதாம் ஞானமதை யுற்றான் சாவர் ணிப்பெயராய்த்
தேவர் வியப்பச் சுரதமனன் சேர்வ னெட்டாம் மனுவாகி.

கு - ரை:- தெவ்வர்—பகைவர், நகரம்—பட்டணம்; இராச்சியம், ஓவல்—ஒழிதல், ஞானம்—சிவஞானம்.

வி - ரை:- பற்றற்ற சிவஞானவிச்சையுடையனா யிருந்தமையால் வணிகன் 'மேலாம் வைசியப்புனிதன்' எனப்பெற்றான். "நோற்கும் வைசியப்புனிதன்' 13 அத் 6 செய், சுரதமன்னன் சாவர்ணிக மனுவாய் விளங்குவது நிகழும் வைவசுத மன்வந்தரத்தின் பின்வரும் எட்டாவது மனுவந்தரத்திலாதலின் சேர்வன் எட்டா மனுவாகி என எதிற்காலத்தாற் கூறப்பெற்றான். இதுபற்றியே முதலத்தியாயத்திலும், சாவர்ணி... ......எட்டாம்மனு......மாபாகன் ஆவான் என எதிர்காலத்தில் கூறியதூஉமென்க. [11]

என்று மார்க்கண் டேயமுனி யெழிலார் தேவி மான்மியமுந், துன்று புகழ்சேர் சுரதமனன் மநுவாய்த் தோற்ற முறுமாறும், ஒன்ற வுரைப்பக் கேட்டருளி யோங்கு முவகைச் சைமினியும், மன்ற வுளத்திற் றேவிபத மருவ வழுத்தி யாடினனால்.

கு - ரை:- ஒன்ற—பொருந்தும்படி, மார்க்கண்டேயமுனி பிருகுவமிசத்திற் பிறந்தவர். சைமினி முனிவரின் ஐயங்களைத் தீர்த்தவர். சைமினி—சைமினி முனிவர். இவர் மிகுந்த ஞானமுடையவர், வியாசருடைய மாணக்கர், மன்ற—பொருந்தும்படி,

மருவ—பொருந்தத் தியானித்து, வழுத்தி—துதித்து, ஆடினன்—மகிழ்ச்சியாற் கூத்தாடினன், ஆல்—ஆசை.

வி - ரை:- பாயிரத்தில் வந்துள்ள நூல் வரலாற்றுச் செய்யுட்கள் இரண்டும் ஈங்கு நோக்குதற்குரியன. [12]

இனைய வாறு பதின்மூன்று யியம்பு மத்தியாயத்திற்
புனையுங் கதையை யாயிரத்தி லாறு நீங்கும் பொருவில்கலி
நனியின் பருணந் தனவருட நண்ணு மிதுன ரவிமனுயுக்
கெனுநா ளுத்த ராடமுறு மெல்லை யாதி யம்மிசைத்தேன்.

கு - ரை:- ஐயாயிரத்தில் ஆறு நீங்கும் பொருஇல் கலி—சமானமில்லாத கலியுக சகாப்தம் நாலாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்று நான்கு. மிதுனரவி—ஆனிமாதம், மனுயுக் எனும் நாள்—பதினுன்காம் நாள், எல்லை ஆனியம்—சூரியனுக்குரிய நாள்; ஞாயிற்றுக்கிழமை.

வி - ரை:- தமிழ்மொழியில் இந்நூல் செய்த காலமுணர்த்துவதிச் செய்யுள், வசுகோணம் என்பதில் வசு என்பது வசுக்களின் எண்ணிக்கையாகிய எட்டினையுணர்த்துவது போல, மனுக்யுக்கெனும் நாள் என்பதில் மனுவென்பது மனுக்களின் எண்ணிக்கையாகிய பதினுன்கை யுணர்த்திற்று. [13]

உலக மெல்லா நிறைந்துறையு மெளியார் தேவி மிகவாழி
யிலகு சிவனுர் தாம்வாழி யெழிலார் தந்தி முகன்வாழி
கலப மயிலூர் குகன்வாழி கண்ணன் வாழி திருவாழி
யுலக தந்தை பாரதியோ டுற்று வாழி வாழியவே.

கு - ரை:- கலபம்—தோகை, குகன்—முருகன், கண்ணன்—திருமால்; கண்விசேடமுடையவன், திரு—இலக்குமி, உலக தந்தை—பிரமதேவன், பாரதி—கலைமகள். [14]

மதுர மளிக்குந் தமிழ்ப்பாவால் வகுத்த தேவி மான்மியத்தை
யதிக விருப்பா யுரைப்பவர்கேட் பவர்களம்மை திருவருளாற்
புதிய வின்பம் பொருளறத்தைப் பூவி லடைந்தே தேகாந்தங்
கதியை யடைவ ரடைவரெனக் கற்ற மேலோர் கழறுவரால்.

கு - ரை:- வகுத்த—செய்யப்பெற்ற, பூ—பூமி, கதி—வீடு.

372

**வி - ரை:-** இயல்பிலே இனிமைதரும் மொழி தமிழ்மொழி யாகலின் மதுரமளிக்குந் தமிழ்ப்பா என்றனர். "தேமதுரத் தமிழோசை" என்பது ஈண்டு உணர்ந்து இன்புறுதற்குரியது. 'தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ' என்பது திருக் கோவையார்.

இன்பம் அனுபவிக்குந்தோறும் புதிய புதிய மகிழ்ச்சியை யுண்டாக்குதலின் அதனைப் புதியவின்பமென்றார். அறத்தாற் பொருளாக்கிப் பொருளான் இன்பநுகர்தலானும் இன்பத்தால் இல்லறங் கூறலானும் "இன்பமும் பொருளு மறனுமென்றாங்கு, முற்படக்கிளந்த வெந்திணைமருங்கின" எனத்தொல்காப்பியனார் இன்பத்தையே முதற்கண் வைத்துச் சூத்திரம் செய்தன ரென்ப வாகலின் அம்முறைபற்றிப் புதியவின்பம் பொருளறமென, வீண்டுக்கூறியதூஉம் என்க. ஈண்டைக்கின்ப மென்றது காதலின்பமாமென்க. "காதலிருவர் கருத்தொருமித் தாதரவு பட்டதே யின்பம்", ஔவை பாடல், இன்பம் அனுபவிக்குந் தோறும் புதிய மகிழ்ச்சியை நல்குமென்பதனை "அறிதோ றறியாமை கண்டற்றாற் காமம், செறிதோறும் சேயிழைமாட்டு' என்னும் அருமைத் திருக்குறளானும் "தேங்குழனிற்றேயுந் தொறு நேராதவின்பஞ் சுரந்திடுமே" என்னும் தணிகைப் புராணத்தானு முணர்க.

அறம்பொருளின்பங்கள் இம்மையில் அடைதற்குரியன வாகலின் "புதியவின்பம் பொருளறத்தைப் பூவிலடைந்தே" என்றும், வீடு மறுமையில் எய்துதற்குரியதாமாகலின் "தேகாந் தம் கதியை யடைவ" ரென்றும் கூறினர். இந்நூலினைக் கற்போர் கதியெய்துதல் ஒருதலையாமாகலின் "கதியை யடைவ ரடைவரென" இருகாலடுக்கியும் கல்வியறிவுடனே மேலான நல்லொழுக்கம் வாய்ந்த சான்றோர்களது வாய்ச்சொல்லே யாண்டும் நம்புதற்குரிய பயன்றரும் சொல்லாமாகலின் "கற்ற மேலோர் கழறுவரால்" என மேலோரைச் சான்று காட்டியும் கூறினரென்க.

'அறம்பொருளின்பம் வீடடைதனூற்பயனே' என்பவா கலின் இந்நூலால் நால்வகைப்பயனும் எய்துவரென்று இச் செய்யுளில் நூற்பயன் கூறினரெனத் தெளிக. [15]

यथा कुण्डलिनी शक्ति र्मायाकर्मानुसारिणी ।
नादबिन्द्वादिकं कार्यं स्या इति जगत्स्थितिः ॥

எனவும் வருமாற்றான் உணர்க. இனி பிந்து என்றது நாத பிந்து சமஷ்டிரூபமாய்ப் பஞ்ச கலைகட்கு மூலமாதலின் ஆறு தத்துவரூபமாயிருக்கும். அது அதிலேயே,

नादबिन्दुविभेदोक्तं षट्तत्वं तत्प्रकाशितम् ।

என வருமாற்றான் உணர்க. இம்மூன்றனுள்ளும் குடிலை சிவனது ஞானசத்தியிலுண்டான நாதம் என்றும் பிந்து ..............கிரியாசத்தியிலுண்டான சத்தி என்றும், வைந்தவம் இச்சாசத்தியிலுண்டான பிந்து நாதங்கள் என்றும் கூறியது.

நாதத்தில் விந்துவுந் நாதவிந் துக்களில்
தீதற் றகம்வந்த சிவன்சத்தி யென்னவே
பேதித்து ஞானங் கிரியை பிறத்தலால்
வாதித்த விச்சையில் வந்தெழும் விந்துவே.

—திருமந். 382.

என வருமாற்றான் உணர்க. இதனானே ஞானத்திற் கிரியையும் கிரியையில் இச்சையுமாகுமாபோற் சிவத்திற் சத்தியுஞ் சத்தியில் வைந்தவமுஞ் சித்தாந்தத்திற் கூறுமாறு கூறினுமாம். அது முன் உதாகரித்த मूलाधारं चतुष्पत्रं இது முதலானவைகளானும் தோன்றும். ஆயினும் மூன்றும் பிரதானமென்பது,

कुटिली कुण्डली बिन्दुरिच्छा ज्ञानक्रियोदितम् ।

என்பதனாற் பெறுதும். இதனானேயன்றே,

क्षित्यादिकुटिलान्तानि षट्त्रिंशत्तत्वरूपकम् ।
शिवेच्छया कुटिलोत्पन्नं नादतत्वं प्रधानकम् ॥

எனவும்,

पृथ्व्यादि कुटिलान्तानि तत्वं कुण्डलिनोदयम् ।

எனவும்,

नादबिन्दुविभेदोक्तं षट्तत्वं तत्प्रकाशितम् ।
अकारोकारमकारः(श्च) बिन्दुनादस्तदन्तकम ॥
षट्कलाशक्तिमध्यस्थे वैखर्यादिसमुद्भवम् ।

எனவும்,

बैन्दवं तत्त्वमध्यास्ते बिन्दुनादकलोदितम् ।
बिन्दुनादकलामध्ये अकारादिसमुद्भवम् ॥
निवृत्यादिकलारूपा अकारादिकलोदिता ।

எனவும்,

पञ्चकृत्यं तदाकारं पञ्चवाग्वृत्तिकारणम् ।
पञ्चमाक्षरसंभिन्नं सर्वं बैन्दवमुद्भवम् ॥
अध्वषट्कमिति प्रोक्तं (सर्वं) पञ्च कलामयम ।

எனவும் பிறவும் வருவதாஉம். இனி ஐவகையில் விரிந்து மூவகையில் அடங்கின சிவதத்துவம் போலவும், ஐவகையில் விரிந்து மூவகையில் அடங்கின சத்தி தத்துவம் போலவும், பிந்து ஐவகையில் விரிந்து இருபத்திஞன்கு பேதமாகவும் வரும். அது ஞானசித்தியில்,

बिन्दुमध्ये तथा नादं बिन्दुनाद द्वयो(दित)म ।
बिन्दुनादस्तथा मध्ये निवृत्यादि कलोदयम ॥
निवृत्यादिकलामध्ये वैखर्यादि समुद्भवम ।
बैन्दवस्थानमध्यस्थे इच्छाज्ञानक्रियोद्भवम् ॥
विज्ञानादित्रयोत्पन्नमीशानादित्रयोद्भवम ।
कारकत्रयसम्भिन्नं तत्पत्रयसमुद्भवम् ॥
कारकत्रयसम्बन्धा (अधः) सर्वसमुद्भवम् ।

विन्दुभेदमिति प्रोक्तं तद्भेदं पञ्चविंशतिः ॥
चतुर्विंशत्तथाभेदं नादरूपं कलामयम् ।

என வருமாற்றான் உணர்க. இந்நாதபிந்து சத்தியாகிற வாகீசுவரிசத்தியில் திக்குற்பத்தி......யெனவும் வரும். ஞான சித்தியில்,

सूक्ष्मवाग्भवमित्यथ वाग्रूपं शक्तिषष्ठकम् ।
अकारोकारमकारः(श्च) बिन्दुनादं तदन्तकम् ॥
षट्कलाशक्तिमध्यस्थे वैखर्यादिसमुद्भवम् ।
व्योमा वागीश्वरी शक्तिः पञ्चवाहकमादिकम् ॥
उत्तरानुत्तरव्याप्तं पूर्वपश्चिम ऊर्ध्वकम् ।
दिशः पञ्च तथा शक्तिरुद्भवं व्योमशक्तितः ॥

எனக் கூறுதலின். இந்த விந்துச் சித்தாந்தம்போல........ (ஆ)ண்டுப் பாவிக்கப்படுமென்றும், நாதம் பரநாதம் என்றும் வழங்கப்படும். அது திருமந்திரத்தில் "வாதித்த விச்சையின் வந்திடும் விந்துவே" என்றபின்,

விந்து வபரம் பரமிரண் டாய்விரிந்
தந்த வபரம் பரநாத மாகியே
வந்தன தம்மிற் பரங்கலை யாதிவைத்
துந்தும் அருணோ தயமென்ன வுள்ளத்தே. 1993

என்றது. இது பரநாத பரவிந்துவிற்குக் கூறியதாகலின், அபரவிந்து அபரநாதம் சுசூட்சும வாக்காதிகளிருக்குமெனக் கூறுவது.

உள்ள வருணோ தயத்தெழு மோசைதான்
தெள்ளும் பரநாதத் தின்செய லென்பதால்
வள்ளல் பரவிந்து வைகரி யாதிவாக்
குள்ளன வைங்கலைக் கொன்று முதயமே. 1994

என வரும். அங்ஙனம் ஞானசித்தியில்,

तत्र कुण्डलि मध्ये तु नादबिन्दुद्वयोद्भवम् ।
तत्र कुण्डलि मध्ये तु अपराख्या परापरा ॥

என வருமாற்றானும் உணர்க. இந்த விந்து ஒளியாகலானும் நாத மொலியாகலானும் இந்த விரண்டின் சமட்டியிலே சூக்குமாதி வாக்குண்டாவதன்றித் தனித்தனி காரணமாக மாட்டாமையின் வாக்குக்கட்கு இரண்டும் காரணமென்றது, சதாசிவாதி மூன்று தத்துவங்கட்குஞ் சிவதத்துவ சத்தி தத்துவ சமட்டியன்றி ஞானக்கிரியை சாமிய நானாதிக்கங் கூடித் தத்துவமாகாதவாறுபோலாம். ஆகவே சதாசிவாதி மூன்றுக்குஞ் சிவஞ்சத்தியி லொடுக்கங் கூறியதுபோல வாக்குக்கட்கும் விந்துநாத சமட்டியிலொடுக்கமுங் கூறவேண்டும் என்க. இதனானேயன்றே முன்னர்,

नादबिन्दु विभेदोक्तं षट्त्त्वं तत्प्रकाशितम् ।

எனத் தோற்றங் கூறியதூஉம். இவ்வாறு பிரகிருதிகலையிற் றோன்றுதலால் ஆன்மாவின்சத்தி அபிவியக்திகயம் பண்ணுகிறது, அது (ம)யக்க விபரீதங்களுக்கு மேதுவாக வேண்டுமாற்.........யர்த்தது......த்தோடுமதன் மூலமான அவித்தையோடுங் கூடிக்கொண்டே அவற்றின் சமட்டியிலே ஆன்ம தத்துவம் இருபத்துநாலுந் தோன்றவேண்டும் என்பதுவுமாயிற்று. இதனானேயன்றே ஞானசித்தியில்,

माया युक्तं तदव्यक्तं तद्व्यक्तं तु महानिति ।

எனவும், அம்மாயை,

आणवे जायते माया मायायां कालसम्भवः ।

என்பதனால் ஆணவோத்பன்னமாய் அந்த அவித்தியாதோஷ மிச்சரமாயிருக்கையினாலும் ஆத்தும தத்துவமும் மாயாப் பிரகிருதி சமஷ்டியிற் றோன்றியதாம். அன்றேல் பிரகாச யேதுவான கலையிற்றோன்றிய பிரகிருதியிற் றமதாதி குணங்கள் தோன்றாவாம் என்க. இதனானேயன்றே மாயா வாதத்தில் குணபேதத்தால் சத்துவப் பிரதானமான பிரகிருதி ஈசுவரோபாதியென்றும், அவித்யா ரூபமான தமப்பிரதான

மான பிரகிருதி சீவோபாதியென்றும் தமப்பிரதான பிரகிருதி சகதுத்பத்தி மூலமென்று மிந்த மூன்று குணத்திற்கு மூல மான பிரகிருதியை ஞானசித்தியில்,

आत्म(नो)त्पत्तिरव्यक्त मव्यक्ताज्जायते महान् ।

என வருமாற்றான்மாவினிடத்துண்டானதாயுங் கூறி மல மாயை பிரகிருதி மூன்றுமொன்ருய்க் காண வைத்ததூஉம் என்க.

இவ்வாறே மயக்கஞ் செய்கிற மாயை ஆன்மாவின் அறிவை கலாதிகளால் விளக்கமுஞ் செய்தலானதுவும் விந்து சத்தியோடே கூடிக்கொண்டே தத்துவங்களை யுண்டாக்கின தென்க, அது ஞானசித்தியில்,

आणवं कुटिला शक्ति म(र्या) तत्वमयोदितम् ।
आणवान्मायथोत्पन्नं तद्गुणं तु प्रकाशकम् ॥

எனவும்,

बिन्दुशक्त्योद्भवं माया मोहिनी मोहकारणम् ।

எனவும்,

माया कुण्डलिनी व्याप्तं जगदेतच्चराचरम् ।

எனவும் வருமாற்றானும்,

आणवान्तर्गतं तत्वं बिन्दुनादकलात्मकम् ।

என பைந்தவ தத்துவமான பிந்து நாதங்களோடே ஆணவ மலம் அவினாபாவமாயிருக்கும் என்றும்,

शिवतत्वमिति प्रोक्तं प्रेरकं तदिहोच्यते ।

என மாயைக்குப் பிரேரகமாயிருக்கும் என்றும் பிறவும் கூறுதலானும் சுத்தாசுத்தங்கள் மிச்சிரமாயிருக்குமாறுங்

தோன்றும். இவைகளொடுங்கி மீளவுமுண்டாதற்குக் காரணமான மாயை குடிலை என்றுங் குண்டலி என்றும் பைந்தவம் என்றும் மூன்ருய்ச் சமட்டிரூபத்தாலொன்ருய் இருக்குமாறென்னை யெனின், குடிலையாவது சர்வதத்துவங்கட்குங் காரணமாயிருக்குஞ் சிவதத்துவந்தான். அது,

क्षित्यादिकुटिला (प्रा)न्तं षट्त्रिंशत्तत्त्वरूपकम् ।
शिवेच्छया कुटिलोत्पन्नं नादतत्त्वं प्रधानकम् ॥

என்பதனுல் அறிக. குண்டலியாவது ஹம்ஸபிரணவாதி மந்திர ஜாத உற்பத்திக்குக் காரணமாய் ஆதார வியாபியாய் யோகிகளால் உபாசிக்கத் தக்கதாயிருக்குஞ் சத்திதத்துவந்தான். அது ஞானசித்தியில் முன்னுதாகரித்தது.

मूलाधारं चतुष्पत्रं तन्मध्ये वशषसथजम् ।
तन्मध्ये कुटिलाकारं त्रिकोणाकारसम्भवम् ॥
नाडीमूलावृताङ्गाहि कुण्डलीहंसनिस्वना ।
कुण्डल्याकारमध्यस्थे प्राणं प्रणवसम्भवम् ॥

என்பதனுல் உணர்க. இவ்வாறு சித்தாந்த சிந்தியவிசுவசாதாக்கியத்திலும்,

आधारस्य प्रधानान्तं कुण्डलीं च
मूलाधाराख्य......ग्नेर्मण्डलोपरिसंस्थिता ।
षडध्वतत्वसंख्याता सर्वतेजोमयान्विता ॥
सर्वशक्तिमया चैवमादि मध्यान्तसंस्थिता ।
नीवारशूकवत्तन्वी सुप्ता चेद्भुजगाकृतिः ॥
चैतन्ययोजनी तत्वे परापरतरे शिवे ।
आधाराणामशेषाणां मेदिनी बोधिनी परा ॥
(वि) निष्यन्दामृतस्याभि विशन्ती शक्तिरूपिणी ।
मण्डलत्रयसंभेदी तारावत्तु त्रिवर्तुला ॥
एवं (ध्या)त्वा सदा योगी नवाधारविभेदनम् ।
कृत्वा तु परमानन्दस्वरूप(ध्या)नतत्परः ॥

पश्चात्सा कुण्डली देवी पीयूषवर्षा शिपं(क्र) ।
आप्यायमन्ती सर्वत्र सिद्धिमुक्तिप्रदायिनी ॥
मूलकुण्डलिनी देवी दृष्ट्वा मन्त्राणि बीजकाः ।
ज्वरमुच्चारसंयुक्ता तत्तद्रूपस्मृतिं पिबेत् ॥
एवं कुण्डलिनी प्रोक्ताऽप्यति गुह्या महोदया ।

எனவும் பிறவும் வருமாற்றுன் உணர்க. வைந்தவமாவது முற்கூறியவாறே தத்துவ ஷட்கமாய் பிந்துநாத த்வயமாய் நாதாந்தமான வாக்பவசத்தி (ஆகும்). அது ஞானசித்தியில்,

नादबिन्दुविभेदोक्तं षट्तत्त्वं तत्प्रकाशितम् ।
अकारोकारमकार:(श्च) बिन्दुनादस्तदन्तकम् ॥
षट्कलाशक्तिमध्यस्थे वैखर्यादिसमुद्भवम् ।

என்றற் றொடக்கத்தாலும் முற்காட்டியவற்றுனும்,

व्योमशक्ति सुसूक्ष्मांशप्रकाशेषु प्रकाशितम् ।
व्योम वागीश्वरी शक्तिः पञ्चवाहक्रमादिकम् ॥

என வருமாற்றுனுமுணர்க. இம்மூன்றும் ஒன்றில் ஒன்று தோன்றினமையாற் கூடிக்கொண்டு ஸமஷ்டி ரூபமாய்க் குடிலையைக் குறித்து விகிருதியாயினு மற்றவற்றைக் குறித்துப் பிரகிருதியாய்ச் சுத்த மாயா சுவரூபமாயிருக்கும். அது,

शिवेच्छया कुटिलोत्पन्नं नादतत्वं प्रधानकम् ।
नादमध्योदितं बिन्दुः शिवशक्त्यर्थनामकम् ॥

எனவும்,

षट् त्रिंशत्तत्वसंभिन्ना कुटिला शक्तिरुद्भवा ।
कुटिला कुण्डली व्याप्ता कुण्डली प्रणवोदिता ॥
जाता कुण्डलिनी शक्तिर्मायाकर्मानुसारिणी ।
नादबिन्द्वादिकं कार्यं तस्या (इति) जगत्स्थितिः ॥

எனவும்,


नानावेदागमाद्यर्थं नानाशास्त्रार्थदर्शनम् ।
नानाशब्दप्रवाहाथ बैन्दवः खल्विहोदितः ॥
बैन्दवं कुटिली व्याप्तं बिन्दुनादोदयोदितम् ।
बैन्दवं तत्वमध्यास्ते बिन्दुनादकलोदितम् ॥
बिन्दुनादकलामध्ये अकारोकारयोदितम् ।
अकारोकारमकारः(श्च) बिन्दुनादस्त्रिपञ्चकम् ॥
कलाध्वा (तः)मध्यमे भागे पञ्चाध्वा चैवमुद्भवम् ।
अकारे वैखरी जाता उकारे मध्यमोद्भवा ॥
मकारे पश्यती जाता बिन्दौ (सूक्ष्मा) तथोदिता ।
नादे जातातिसूक्ष्मावाक् वाक् पञ्चमकलोदिता ॥

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க. இவற்றுள் குடிலை குண்டலி வைந்தவ மூன்றும் கிரமத்திலே தோன்றிச் சத்தி சிவம் வைந்தவமெனப் பேர்பெற்றொன்றோடொன்று வியாப்தமாய் சமட்டியாயிருந்தவாறும் அவற்றுள் வைந்தவம் பரநாதம் பரவிந்துவாயும் அபரநாதம் அபரவிந்துவாயும் நால் வகைப்பட வந்தவாறும் அந்த வைந்தவம் பிரணவ கலை வாக்கு பேதங்களுக்குப் பஞ்ச சுரோதசாய் மூலகாரணமான வாறும் கண்டுகொள்க. இந்தக் குடிலை குண்டலி வைந்தவ மூன்றும் சித்தாந்தத்திலே பரநாதம் பரவிந்து அபரவிந்து எனப் பெயர்பெற்று, கலக்கப்படாத பாகமான சுத்தமாயையிலே தோன்றினவாகக் கூறப்படும், அது சிந்தியவிசுவ சாதாக்கியத்தில்,

सादाख्यस्य हृदम्भोजपरमाकाशमध्यतः ।
परनादः समुद्भूतस्तुटिः कालो.........ते ॥
तुटिका......क्तो नादाद्बिन्दुः परो भवेत् ।
तत्कालेन तु संयुक्तो बिन्दुश्च परबिन्दुतः ॥
बिन्दोर्बीजसमुत्पत्तिस्तत्रापि च विशेषतः ।
बीजस्य बालभावे तु परा वाणी विजृम्भिता ॥
सा वै द्विगुणिताकारा......श्चद्यौवन...... ।
पश्यन्त्यभिज्ञा त्रिगुणा (णिता) यौवनं मध्यमो भवेत् ॥

# தருமபுர ஆதீனச் சேரிப்பிரசாரம்.

தருமபுர ஆதீனப் பிரசாரகோஷ்டியார் ஜில்லாக்கள்தோறும் சென்று பிரசாரப் பணிபுரிந்து வந்ததை அன்பர்கள் அறிவர். இப்பொழுது சேரியில் பிரசாரம் தொடங்கியிருக்கிறது. அதன் தொடக்கவிழா 12—5—52 அன்று மாலை மாயூரத்தின் வடஎல்லையாகிய கழுக்காணிமுட்டத்தில் நடைபெற்றது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஆணைப்படி கழுக்காணிமுட்டம் ஹயர்



சேரிப்பிரசாரத் தொடக்க விழா.

எலிமெண்டரி ஸ்கூலின் நிர்வாகியும், தலைவருமாகிய பிர்மஸ்ரீ A. சௌந்தரராஜ ஐயங்கார் அவர்கள் அருகாமையிலுள்ள சேரி அன்பர்கள் அனைவர்களுக்கும் நிகழ்ச்சியை அறிவித்து எல்லோரையும் ஸ்கூலில் கூடியிருக்கச் செய்தார்கள், கூட்டத்தின் தொடக்கத்தில் அனைவர்க்கும் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருநீறு அளிக்கப்பெற்றது. சிதம்பரம் காங்கிரஸ் தொண்டர் திரு. நயினாப்பிள்ளை அவர்கள் ஹரிஜன முன்னேற்றம்பற்றிப் பேசினார்கள். தஞ்சை

Regd. No. M. 4454. GNANASAMBANDAM

382

ஜில்லாபோர்டுஉறுப்பினர் திரு. A. சொக்கலிங்கம்பிள்ளை அவர்கள் தலைமைவகித்துச் சிறப்பித்தார்கள். சௌந்தரராஜ ஐயங்கார் அவர்கள் தொடக்கத்தில் தலைவரையும் பேச்சாளரையும்அறிமுகப்படுத்தி வைத்து, சேரிப்பிரசாரத் தொடக்கவிழா தமது பார்வையிலுள்ள பள்ளியில் நடைபெற்றதுகுறித்து மகிழ்ச்சியும் தெரிவித்துக் கொண்டார்கள். புகைப்படம் எடுக்கப்பட்டது. ஹரிஜனச்சிறுமிகள் கடவுள் வணக்கம் பாடினார்கள். ஹரிஜனக்குழந்தைகளுக்கும் ஏனையோர்களுக்கும் தின்பண்டம் வழங்கப்பட்டன.

21—5—52 அன்று சீகாழி கோவிலானடித்தோப்பில் சாதுவன் மாணவர் இல்லத்தின் அருகே சேரிப்பிரசாரம் நடைபெற்றது. அவ்வூர் ஹரிஜனமக்களும், சுற்றுப்புறத்திலுள்ள ஏனைய சேரி மக்களும் திரளாகக் கூடியிருந்தார்கள். வழக்கம்போல் அங்கும் திருநீறு அனைவர்க்கும் அளிக்கப்பெற்றது. திரு. சொக்கலிங்கம் பிள்ளை தலைமை வகித்தார்கள். சீகாழிக் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான், ஆதீனக்கல்லூரிப் பேராசிரியர்கள் வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் வித்துவான். V. S. குருசாமி, சீகாழிமாஜிசேர்மன் முத்துக்குமரசாமி பிள்ளை, பிரசாரகோஷ்டித்தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் பேசினார்கள். ஹரிஜனமக்களின் சார்பாக M. S. மணி ஆதீனச்சேவையைப்பாராட்டி நன்றி தெரிவித்துக் கொண்டார். சிற்றுண்டி வழங்கப்பெற்றது.

## ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நக்ஷத்திரநாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து அவ்வத்தலப் பதிகத்தையும் அச்சிட்டு வழங்கி வருவதுபோல. இம்மாதத்திலும் 3—6—52 அன்று திருகோழம்பம் கோகிலேசுவர சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகம் அடங்கிய இவ் வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—6—1952.